بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 10

இதழ் 30&31

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - முஹர்ரம் 28- ஸஃபர் 07 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - வஃபா 24-31 ★ 2025 ஜூலை 24- 31

## அல்லாஹ்வின் கட்டளை

ثُمَّ اَفِيۡضُوۡا مِنۡ حَيۡثُ اَفَاضَ النَّاسُ وَاسۡتَغۡفِرُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ غَفُوۡرٌ رَّحِيۡمٌ ۝

**பொருள்**

**பிறகு மக்கள் எங்கிருந்து திரும்புகின்றனரோ, அங்கிருந்தே நீங்களும் திரும்புங்கள். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள். அல்லாஹ் நிச்சயமாக மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான்.**

**(அல்பக்கரா: 200)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**மனிதன் எந்த அளவிற்கு இறை நெருக்கத்தை பெறுவானோ அதே அளவிற்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் கனிகளிலிருந்தும் பங்கு பெறுவான்**
**எந்த அளவிற்கு அவன் தொலைவில் இருப்பானோ அதே அளவிற்கு அவனது துஆ ஒப்புக் கொள்ளப்படுதலில் திரையும் தொலைவும் ஏற்பட்டு விடுகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் நிபந்தனை

இதனை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! அதாவது மனிதனின் துஆ எப்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என்றால், அவன் கவனக் குறைவு, தீமை, அசுத்தம் போன்றவற்றை அல்லாஹ்விற்காக விட்டு விடும்போது தான் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எந்த அளவிற்கு மனிதன் இறை நெருக்கத்தை பெறுவானோ அதே அளவிற்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் கனிகளிலிருந்தும் பங்கு பெறுவான். எனவே அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَ اِذَا سَاَلَكَ عِبَادِىۡ عَنِّىۡ فَاِنِّىۡ قَرِيۡبٌ ؕ اُجِيۡبُ دَعۡوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ
فَلۡيَسۡتَجِيۡبُوۡا لِىۡ وَلۡيُؤۡمِنُوۡا بِىۡ لَعَلَّهُمۡ يَرۡشُدُوۡنَ

மேலும் மற்றோர் இடத்தில் கூறுகின்றான்:

وَاَنّٰى لَهُمُ التَّنَاوُشُ مِنۡ مَّكَانٍۢ بَعِيۡدٍ

பொருள்: எவர் என்னிடமிருந்து தொலைவில் இருக்கின்றாரோ அவரது துஆவை நான் ஏன் கேட்கவேண்டும்?ஆக, இது ஒருவகையில் இறை வல்லமையின் பொதுவான காட்சியிலிருந்து கிடைக்கும் ஒரு பாடமாகும். இறைவனால் கேட்க முடியாது என்பதல்ல. அவனே உள்ளத்தின் மறைவிலும் மறைவான எண்ணங்களையும், அறிகின்றான்; மேலும், இன்னும் உதித்திடாத எண்ணங்களையும் கூட அவன் அறிந்திருக்கின்றான். ஆனால், இங்கு மனிதனுக்கு இறை நெருக்கத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளான். எவ்வாறு தொலைவில் இருக்கும் குரல் கேட்பதில்லையோ அதே போன்று எந்த நபர் கவனக்குறைவு, தீமை, அசுத்தம் போன்றவற்றில் மூழ்கி இருப்பாரோ அவர் என்னிடமிருந்து தொலைவில் விலகி சென்று விடுகின்றார். எந்த அளவிற்கு அவன் தொலைவில் இருப்பானோ அதே அளவிற்கு அவனது துஆ ஒப்புக் கொள்ளப்படுதலில் திரையும், தொலைவும் ஏற்பட்டு விடுகின்றது.(மல்ஃபூஸாத், தொகுதி 2பக்-79-80)

**அமானிதம் நேர்மை மற்றும் உடன்படிக்கைகளை பேணுவதற்கு இஸ்லாம் சிறப்பு முக்கியத்துவம் வழங்குகின்றது. அமானிதங்களிலும், உடன்படிக்கைகளிலும் சிறந்த முன்மாதிரியை முன்வைக்கக் கூடிய அந்த நம்பிக்கையாளரே வெற்றி பெற முடியும் என்று இஸ்லாம் கூறுகின்றது**

وَالَّذِيۡنَ هُمۡ لِاَمٰنٰتِهِمۡ وَعَهۡدِهِمۡ رٰعُوۡنَ

(23:09)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பின்னர் உடன்படிக்கையை பேணுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த கவனத்தில் கொண்டிருந்தார்கள் என்றால், அன்னார் (ஸல்) நபித்துவ வாதம் கூட செய்திருக்கவில்லை ; அப்போது, கோத்திரங்களுக்கிடையிலான போர்கள், அன்றாட வாழ்வின் சண்டை சச்சரவுகள் மற்றும் குழப்பங்களை கண்டு மக்காவின் சில இளைஞர்கள் ஓர் இயக்கத்தை உருவாக்கியிருந்தார்கள். அதன் நோக்கம் இதுவாக இருந்தது. அதாவது, அது அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும். இறைத் தூதர் (ஸல்) அவர்களும் அந்த இயக்கத்தில் இணைந்தார்கள். மேலும், அனைவரும் இணைந்து, “கடலில் ஒரு சொட்டு நீர் எஞ்சியிருக்கும் வரை நாங்கள் எப்போதும் அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வோம் ; மேலும், அவர்களின் உரிமையை அநீதியாளர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சி செய்வோம் ; மேலும், எங்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால், பின்னர் எங்கள் தரப்பிலிருந்து அநீதியிழைக்கப்பட்டவர்களுக்குரிய உரிமையை வழங்குவோம்” என்று அவர்கள் சத்தியங்கள் செய்திருந்தனர். இந்த இயக்கம் அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கான உதவி மற்றும் அவர்களின் அமானிதங்களின் பாதுகாப்பு என்ற நோக்கத்தை அடிப்படையாக கொண்டு உருவானது. மேலும் அது என்ன பணி செய்தது? மேலும் எவ்வாறு

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

## நபிமொழி

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபர் மஸ்ஜிதில் திருக்குர்ஆன் ஓதுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செவியுற்றார்கள். அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ்வே! இவர் மீது கருணை காட்டுவாயாக! எந்த சூராக்களில் நான் என்னென்ன வசனங்களை மறந்திருந்தேனோ அந்தந்த வசனங்களை இவரோ எனக்கு நினைவூட்டி விட்டார்.

மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்தவாறு மேலும் இந்த அளவில் மட்டும் விஷயத்தை அதிகரித்துள்ளார்கள்; அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது வீட்டில் தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருந்தார்கள். இதற்கிடையில், அன்னார் (ஸல்) அப்பாத் (பின் பிஷர்) (ரலி) அவர்களின் குரலை செவியுற்றார்கள். அன்னார் (ரலி) மஸ்ஜிதில் தொழுது கொண்டிருந்தார்கள்.

அப்போது, அன்னார் (ஸல்) ஆயிஷாவே! இது அப்பாத் (ரலி) அவர்களின் குரலா? என்று கேட்டார்கள்.அதற்கு, ஆம்! என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) , அல்லாஹ்வே அப்பாத் (ரலி) மீது கருணை புரிவாயாக! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள்! பிலால் இரவில் பாங்கு கொடுக்கின்றார்; நீங்களோ உண்டு, பருகிக் கொண்டிருங்கள்; எந்த அளவிற்கு என்றால், உம்மே மக்தூம் (ரலி) பாங்கு கொடுக்கின்றார். அல்லது உம்மே மக்தூம் (ரலி) அவர்களின் பாங்கை கேளுங்கள். மக்கள் காலை ஆகிவிட்டது என்று தம்மிடம் கூறாதவரை உம்மே மக்தூம் பாங்கு கொடுத்ததில்லை. * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

அனைத்து திட்டங்களையும் மேற்கொண்ட பிறகு, அன்னார் (ஸல்) தமது இறைவனின் சன்னிதானத்தில் துஆவிற்காக கரத்தை உயர்த்தினார்கள்: மேலும் கூறினார்கள்:

اَللّٰهُمَّ خُذْ عَلٰى أَسْمَاعِهِمْ وَأَبْصَارِهِمْ فَلَا يَرَوْنَا إِلَّا بَغْتَةً وَلَا يَسْمَعُوْنَ بِنَا إِلَّا فَجْأَةً

அல்லாஹ்வின் நுட்பமான ஞானத்திற்கு ஏற்ப அவர்கள் அந்த உடன்படிக்கையை முறித்துள்ளனர் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்

மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு தாக்குதலுக்கான அனுமதி இருந்திருக்கவில்லை. மேலும், குறைஷியர்கள் உடன்படிக்கையை முறித்ததனால் அந்த அனுமதி கிடைத்து விட்டது. இதுவே அதன் நுட்பமான ஞானமாக இருந்தது இதனால் நல்ல விளைவு வெளிப்படுமா? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கேட்டார்கள். அதற்கு, ஆம்! விளைவு நல்லதாக வெளிப்படும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யான் மதீனாவிற்கு வருகை தருவது தொடர்பாக ஸஹாபிகளுக்கு முன்பே கூறிவிட்டார்கள். அபூ ஸுஃப்யான் உங்களிடம் வந்து கொண்டிருக்கின்றார்; உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்ளுங்கள் ; உடன்படிக்கையை நீட்டித்துக் கொள்ளுங்கள் என்று அவர் கூறுவார். ஆனால், அவர் அதிருப்தியுடன் திரும்பி செல்வார். அவரது எந்தக் கூற்றும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்று அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள்.

நான் உலகின் பொதுவான நிலைமைகளை குறித்தும் கூற விரும்புகின்றேன். துஆ செய்து கொண்டிருங்கள்! என்று பெரும்பாலும் நான் கூறி வருகின்றேன்

---

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 ஜுன் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **13 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

சில ஜுமுஆக்களுக்கு முன்னர் மக்கா வெற்றி தொடர்பாக துவக்க குறிப்புகள் எடுத்துரைக்கப்பட்டிருந்தன. இன்று அது தொடர்பாக கூடுதல் விளக்கத்தை எடுத்துரைப்பேன்.

இந்தப் போருக்கான காரணம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது ஹுதைபியா உடன்படிக்கையை குறைஷியர்கள் முறித்ததும், "நாங்கள் உடன்படிக்கையை முறிக்கின்றோம்; மேலும் நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் போர் புரிவோம்" என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவரிடம் மிகவும் ஆணவம் மிக்க வடிவில் கூறியது இந்தப் போருக்கான உடனடி காரணமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தபோது, அன்னார் (ஸல்) மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள்.

(குறைஷியர்களாகிய) அவர்கள் உடன்படிக்கையை முறித்ததன் விளக்கம் இவ்வாறாகும்:

ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்தபோது, அரபுக் கோத்திரங்களில் எவர் விரும்பினாலும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாம்; மேலும், எவர் விரும்புவாரோ அவர் குறைஷியர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்ற ஒரு நிபந்தனையும் இருந்தது. ஆக,பனூ பக்ர் மற்றும் பனூ குஸாஆ மற்றும் ஹரமிற்கு அக்கம் பக்கத்தில் வசித்து வந்தவர்கள் ஆகியோரில் பனூ குஸாஆ கோத்திரத்தார் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். மேலும், அவர்களின் எதிர் கூட்டத்தினரான பனூ பக்ர் குறைஷியர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். மேலும், இரண்டு கோத்திரத்தாரும் பரஸ்பர சண்டையிலிருந்து பாதுகாப்பாகி விட்டனர். (ஃபத்ஹுல் பாரீ, ஷரஹ் ஸஹீஹ் புஹாரி, தொகுதி 7, பக்கம் 661,ஆராம் பாஃக் கராச்சி)

அறிவீனமான காலகட்டத்தில்,பனூ குஸாஆ மற்றும் பனூ பக்ருக்கிடையில் போர் நிகழ்ந்திருந்தது. அதில் பனூ பக்ர் கோத்திரத்தார் பனூ குஸாஆவைச் சேர்ந்த ஒரு நபரை கொன்று விட்டனர். மேலும், பனூ குஸாஆ கோத்திரத்தார் பனூ பக்ருடைய மூன்று நபர்களை ஹரமின் எல்லைகளுக்குள் கொன்று விட்டனர். பனூ பக்ர் மற்றும் பனூ குஸாஆ இதே நிலையில் இருந்தனர். அதாவது, அவர்களுக்கிடையில் பரஸ்பர சண்டைகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. அந்நிலையில் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வருகை நிகழ்ந்தது. அன்னார் (ஸல்) வாதம் புரிந்தார்கள்; அப்போது, மக்கள் இஸ்லாத்தை குறித்து மும்முரமாகிவிட்டனர். புதிய விஷயம் அவர்களின் முன்பு வந்துவிட்ட போது, அது தொடர்பாக பேசத் தொடங்கி விட்டனர். மேலும் ஒருவர் மற்றவரிடமிருந்து விலகிக் கொண்டனர். ஆயினும், அவர்கள் உள்ளங்களில் கோபம் மற்றும் ஆக்ரோஷத்தை மறைத்து வைத்திருந்தனர்.

ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு, ஷஃபான் மாதம் வந்தது. மேலும், ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்து 12 மாதங்கள் கழிந்திருந்தன. அப்போது பனூ பக்ர் கோத்திரத்தின் ஒருவன் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கு எதிரான கவிதைகளை படித்தான். அதாவது இழிவான கவிதைகளை கூறினான். பனூ குஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் அந்த நபர் அந்தக் கவிதையை படிப்பதை கேட்டபோது, அவனைக் கொன்று விட்டார். மேலும் அவனது தலையை அவர் உடைத்து விட்டார். இந்த சம்பவத்தால் இரண்டு கோத்திரங்களுக்குள் சண்டை நிகழ்ந்து விட்டது. ஏற்கனவே கோத்திர பகைமை இருந்து கொண்டிருந்தது. மேலும், தற்காலிகமாக அது முடிவடைந்திருந்தது. பனூ பக்ர் கோத்திரத்தைச் சேர்ந்த எந்த நபர் இந்த இழிவான கவிதையை எழுதியிருந்தானோ அவன் பனூ பக்ர் கோத்திரத்துடைய பனூ நுஃபாஸஃ குடும்பத்தின் உறுப்பினராக இருந்தான். அந்த கவிஞனை பனூ குஸாஆ கோத்திரத்தின் இளைஞர் காயப்படுத்தியபோது, பனூ பக்ர் கோத்திரத்தைச் சேர்ந்த பனூ நுஃபாஸஃ, பனூ குஸாஆவிற்கு எதிராக நபர்களையும்,ஆயுதங்களையும் கொடுத்து உதவும்படி குறைஷியர்களிடம் விண்ணப்பம் செய்தது.

அபூ ஸுஃப்யானைத் தவிர்த்து மற்ற குறைஷியர்கள் அவர்களுக்கு உதவி செய்வதற்கு சம்மதம் தெரிவித்தனர். அவரிடம் ஆலோசனையும் செய்யப்படவில்லை ; அவருக்கு அந்த விஷயம் தெரிந்திருக்கவுமில்லை.

ஒரு கூற்று இவ்வாறு உள்ளது. அதாவது, அவரிடம் ஆலோசனை செய்யப்பட்டது; ஆனால் அவர் அதனை நிராகரித்து விட்டார். அதாவது, போர் புரிவதற்கு மறுத்து விட்டார். ஆனால், இதன் பின்னரும் குறைஷியர்கள் ஆயுதங்கள், குதிரைகள் மற்றும் போர் வீரர்களுடன் அவர்களுக்கு உதவி செய்தனர். பனூ குஸாஆ கோத்திரத்தார் தற்காப்பு செய்து கொள்ள முடியாமல் போக வேண்டும் என்பதற்காக அவர்கள் அனைவரும் இரகசியமாக தாக்குதல் நடத்தி விட்டனர். பனூ குஸாஆ உடன்படிக்கையின் காரணமாக தாங்கள் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக கருதிக் கொண்டிருந்தனர். மேலும், (இந்த தாக்குதலை) அறியாதவர்களாக இருந்தனர். குறைஷியர்கள், பனூ பக்ர் மற்றும் பனூ நுஃபாஸஃ ஆகியோரை வதீர் எனும் இடத்தில் சந்திப்பதாக வாக்குறுதி செய்திருந்தனர். இது புனித மக்காவின்

மேய்ச்சல் பகுதியாக இருந்தது. அது மக்காவின் தென் மேற்கில் ஹரமின் எல்லைகளிலிருந்து 16 கி.மீ தொலைவில் இருந்தது. பனூ குஸாஆவின் வீடு அதே இடத்தில் தான் இருந்தது. எதிரிகளாகிய இந்த மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் அங்கு சந்தித்தனர். குறைஷியத் தலைவர்களும் மாறுவேடத்தில் இருந்தனர். முகமூடி அணிந்திருந்தனர். அவர்களில் ஸஃப்வான் பின் உமைய்யா, இக்ரிமா பின் அபீ ஜஹல், ஹுவைத் பின் அப்துல் உஸ்ஸா, ஷைஃபா பின் உஸ்மான், மற்றும் மிக்ரஸ் பின் கஃப்ஸ் ஆகியோர் இருந்தனர். இவர்கள் அனைவருடனும், அவர்களுடைய அடிமைகளும் இருந்தனர். மேலும், பனூ பக்ருடைய தலைவன் நவ்ஃபல் பின் முஆவியாவும் இருந்தான். பனூ குஸாஆ (எதுவும்) அறியாதவர்களாக மற்றும் நிம்மதியாக இரவில் உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலார் குழந்தைகளாகவும், பெண்களாகவும், பலவீனமானவர்களாகவும் இருந்தனர். குறைஷியர்களும், பனூ நுஃபாஸாஃவும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மேலும், மக்களை கொலை செய்யத் துவங்கி விட்டனர். எதுவரை என்றால், அவர்களில் சில மக்கள் தப்பியோடி ஹரமின் எல்லைகளை அடைந்து விட்டனர். மேலும், பனூ குஸாஆ கோத்திரத்தினர் பனூ பக்ர் கோத்திரத்தின் தலைவன் நவ்ஃபல் பின் முஆவியாவிடம், நவ்ஃபலே! தற்போதோ நாங்கள் ஹரமில் நுழைந்து விட்டோம்; உங்கள் தெய்வத்தின் பெயரில் எச்சரிக்கிறோம்! என்று கூறினர். அதற்கு, இன்று எங்களுக்கு எந்த தெய்வமும் இல்லை என்று நவ்ஃபல் பின் முஆவியா மிகவும் ஆணவத்துடன் கூறினான். மேலும் ஹரமிலும் அவர்கள் கொலைகளை தொடர்ந்தனர். பனூ பக்ர் அந்த நாளன்று பனூ குஸாஆவின் இருபது நபர்களை கொலை செய்தனர்.

எவ்வாறிருப்பினும், குறைஷியர்கள் தங்களது இந்த செயலால் வெட்கப்பட்டனர். மேலும் கவலையடைந்தனர். தங்களது இந்த செயலால் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கும், தங்களுமிடையில் இருந்த அந்த உடன்படிக்கை முறிந்து விட்டது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஸுஹைல் பின் அம்ர், நவ்ஃபலிடம் கூறினார்:

நாங்கள் உம்முடனும், உமது கூட்டாளிகளுடன் இணைந்து செய்த கொலைகளை நீ நன்கறிவாய்.: நீ அவர்களை படுகொலை செய்திருக்கின்றாய்; மேலும், எஞ்சிய மக்களையும் நீ கொலை செய்ய விரும்புகின்றாய்; ஆனால் நாங்கள் அதில் உம்மை பின்பற்றமாட்டோம்; அவர்களை விட்டு விடு!

ஆக, நவ்ஃபல் அவர்களை விட்டு விட்டான். மேலும் அவர்கள் சென்று விட்டனர். ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் மற்றும் அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆஃ இருவரும் இணைந்து ஸஃப்வான் பின் உமைய்யா, ‘ஸுஹைல் பின் அம்ர் மற்றும் இக்ரிமா பின் அபீ ஜஹ்ல் ஆகியோரிடம் சென்றனர். மேலும், நீங்கள் இப்படி ஏன் செய்தீர்கள்? உங்களுக்கோ உடன்படிக்கை இருக்கின்றதே? என்று கூறியவாறு அவர்கள் பனூ குஸாஆவிற்கு எதிராக பனூ பக்ருக்கு உதவி செய்வதற்காக அவர்களை மிகவும் கடிந்து கொண்டனர். மேலும், நீங்கள் செய்த பணியானது நமக்கும், முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் இடையிலான உடன்படிக்கையை முறிக்கக் கூடியதாகும் என்றும் கூறினர். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 6, பக்கம் 200 - 201, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் அபூ ஸுஃப்யானிடம் சென்றான். மேலும், சமுதாயம் என்ன செய்திருக்கின்றது? என்று கேட்டார். அபூ ஸுஃப்யான் அதனைக் கேட்டு விட்டு, இது எப்படிப்பட்ட சம்பவம் என்றால், நான் இதில் பங்கு பெறவில்லை ; ஆயினும், அதிலிருந்து நான் விலகிக் கொள்ளவும் மாட்டேன்; இது மிகவும் மோசமாக நிகழ்ந்துள்ளது; இறைவன் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் தற்போது நிச்சயமாக நம்முடன் போர் புரிவார்கள். அபூ ஸுஃப்யான் கூடுதலாக இவ்வாறும் கூறினார்: எனது மனைவி ஹிந்தா என்னிடம் கூறினார்:

அவர் ஒரு பயங்கரமான கனவு கண்டுள்ளார். முஹஸ்ஸப் பள்ளத்தாக்கு பக்கம் பைத்துல்லாஹ்விலிருந்து ஒன்னரை மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு மலை ஹஜுன் ஆகும். அதன் புறமிருந்து இரத்தத்தின் ஒரு நதி ஓடியவாறு வந்தது. மேலும், கன்தமஃ வரை வந்தடைந்து விட்டது. கன்தமஃ மினாவின் வழிப் பாதையில் மக்காவின் ஒரு பிரபல்யமான மலையாகும். மக்கள் அதனை விரும்பியிருந்தார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா,தொகுதி 3, பக்கம் 103,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அதாவது, அந்த நதியில் இரத்தம் ஓடியவாறு வருகின்றது. அதனால் அந்த மக்கள் மிகவும் பயந்து விட்டனர். எவ்வாறிருப்பினும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கும் பனூ குஸாஆவின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் குறித்து ஆன்மிகக் காட்சியின் வடிவில் அல்லாஹ் தகவல் தெரிவித்தான்.

உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் மைமூனா பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) தம்முடன் இரவைக் கழித்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) தொழுகைக்காக உளூ செய்வதற்காக எழுந்தார்கள். அன்னார் (ஸல்) உளூ செய்யக் கூடிய இடத்தில் இருந்தார்கள். அப்போது, ..

لَبَّيْكَ لَبَّيْكَ لَبَّيْكَ

என்று அன்னார் (ஸல்) மூன்று முறை கூறியதை நான் செவியுற்றேன்.

பொருள்: நான் ஆஜராகியுள்ளேன் ; நான் ஆஜராகியுள்ளேன்; நான் ஆஜராகியுள்ளேன்.

பின்னர் மூன்று முறை .

نُصِرْتَ نُصِرْتَ

என்றும் கூறினார்கள். பொருள்: உமக்கு உதவி செய்யப்பட்டுள்ளது; உமக்கு உதவி செய்யப்பட்டுள்ளது; உமக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

அன்னார் (ஸல்) உளூ செய்து விட்டு வந்தபோது, அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் மூன்று முறை لَبَّيْكَ لَبَّيْكَ لَبَّيْكَ என்று கூறியதையும், மேலும், மூன்று முறை نُصِرْتَ نُصِرْتَ என்று கூறியதையும் நான் செவியுற்றேன். தங்களிடம் யாரேனும் ஒரு நபர் வந்திருந்தாரா? அவருடன் தாங்கள் உரையாடிக் கொண்டிருந்தீர்களா? என்று நான் கேட்டேன்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: பனூ கஅப் என்பவர் பனூ குஸாஆவின் ஒரு கிளைக் கோத்திரத்தைச் சேர்ந்த நபர் ஆவார்; அவர் பனூ பக்ருக்கு எதிராக கவிதை கூறியவாறு, என்னை உதவிக்காக அழைத்துக் கொண்டிருந்தார். இது ஆன்மிகக் காட்சியின் வடிவில் இருந்தது. மேலும், குறைஷியர்கள்அவர்களுக்கு எதிராக பனூ பக்ர் பின் வாயிலுக்கு உதவி செய்துள்ளார்கள். ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மூன்று நாட்களுக்குப் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மக்களுக்கு ஸுபுஹ் தொழுகையை தொழ வைத்தார்கள். அப்போது,யாரோ ஒருவர் இந்தக் கவிதைகளைப் படிப்பதை நான் செவியுற்றேன்:

يَارَبِّ إِنِّي نَاشِدٌ مُحَمَّدًا حِلْفَ أَبِيْنَا وَأَبِيْهِ الْأَتْلَدَا

பொருள்: எனது இறைவா! எங்களுடைய மூதாதையர்களுக்கும், அவர்களின் மூதாதையர்களுக்கும் மத்தியில் ஏற்பட்ட அந்த உடன்படிக்கையை நான் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

மற்றோர் அறிவிப்பில் உள்ளது: எந்த நாள் இரவில், பனூ நுஃபாஸஃ மற்றும் பனூ குஸாஆவின் சம்பவம் வதீர் என்ற இடத்தில் நிகழ்ந்ததோ அந்த நாள் இரவின் காலையில், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: ஆயிஷாவே! குஸாஆவின் ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! போர்கள் ஏற்கனவே அவர்களை அழித்திருக்கும் போது, தங்களுக்கும், அவர்களுக்கும் மத்தியில் நடந்த அந்த உடன்படிக்கையை முறிப்பதற்கு குறைஷியர்கள் துணிவு கொள்வார்களா என்ன? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: எந்த விஷயத்திற்கு அல்லாஹ் எண்ணம் கொண்டுள்ளானோ அந்த விஷயத்திற்காக அவர்கள் அந்த உடன்படிக்கையை முறித்துள்ளனர். அதில் நன்மை உள்ளதா? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, ஆம்! அதில் நன்மை இருக்கின்றது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதாவது, இதுவோ அல்லாஹ்வின் விருப்பமாக இருந்தது. அவர்கள் உடன்படிக்கையை முறிக்க வேண்டும்; பின்னர் அவர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும்.

(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5,பக்கம் 201 -202, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

எவ்வாறிருப்பினும், இதே சம்பவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். தமது தொனியில் அன்னார் (ரலி) இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் மைமூனா (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஓர் இரவு, என்னுடைய முறையில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னுடன் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுந்தபோது,அன்னார் (ஸல்) உளூ செய்தவாறு பேசினார்கள். மேலும்,

لَبَّيْكَ لَبَّيْكَ لَبَّيْكَ

என்று அன்னார் (ஸல்) கூறிக் கொண்டிருந்த சப்தம் எனக்கு கேட்டது.அதன் பிறகு, .

نُصِرْتَ نُصِرْتَ

என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: அன்னார் (ஸல்) வெளியில் வருகை தந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மனிதர் யாரும் வந்திருந்தாரா? அவருடன் தாங்கள் பேசிக்

கொண்டிருந்தீர்களா? என்று நான் கேட்டேன். அதற்கு, ஆம்! எனக்கு முன்னால் ஆன்மிகக் காட்சியில் குஸாஆ கோத்திரத்தின் ஒரு குழு வந்தது. மேலும், அவர்கள் கூச்சலிட்டவாறு இவ்வாறு கூறிக் கொண்டு சென்று கொண்டிருந்தனர்; அதாவது, நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களிடம் அவர்களின் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம்; உம்முடனும், உம்முடைய மூதாதையர்களுடனும் நாங்கள் உடன்படிக்கை செய்திருந்தோம்; மேலும், நாங்கள் உமக்கு உதவி செய்து வந்திருக்கின்றோம்; ஆனால், குறைஷியர்கள் எங்களுடன் உடன்படிக்கையை முறித்து விட்டனர்; மேலும் இரவு நேரத்தில் எங்களில் ஒருவர் ஸஜ்தாவிலும், மற்றொருவர் ருகூவிலும் இருந்த போது எங்கள் மீது தாக்குதல் தொடுத்து எங்களை கொன்று விட்டனர்; தற்போது நாங்கள் உமது உதவியை பெறுவதற்காக வந்துள்ளோம்.

சுருக்கமாக, நான் கண்டேன்; அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

குஸாஆ கோத்திரத்தின் ஒரு நபர் நின்று கொண்டிருப்பதை நான் கண்டேன்; ஆன்மிகக் காட்சியில் அவர் எனக்கு தென்பட்டபோது, நானோ

لَبَّيۡكَ لَبَّيۡكَ لَبَّيۡكَ

என்று கூறினேன்.அதாவது நான் உமது உதவிக்காக ஆஜராக இருக்கின்றேன். மூன்று முறை கூறினேன். பின்னர்

نُصِرۡتَ نُصِرۡتَ

என்று நான் கூறினேன்.அதாவது உமக்கு உதவி செய்யப்படும்! இதனையும் மூன்று முறை கூறினேன். அடுத்து, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அதே நாளன்று காலைப் பொழுதில், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எனது வீட்டிற்கு வருகை தந்தார்கள். மேலும், கூறினார்கள்: குஸாஆ கோத்திரத்தாருடன் ஒரு அபாயகரமான சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

குஸாஆ கோத்திரத்தாருடன் அபாயகரமான சம்பவம் இவ்வாறே நிகழ்ந்திருக்கும் என்று நான் புரிந்து கொண்டேன். அதாவது, அவர்கள் எல்லையில் இருக்கின்றனர். மேலும், மக்காவாசிகளுக்கோ பனூ பக்ருடன் உடன்படிக்கை உள்ளது. அவர்கள் குஸாஆ கோத்திரத்தார் மீது தாக்குதல் தொடுத்து விட்டனர் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

நான் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இத்தனை சத்தியங்களுக்குப் பிறகு குறைஷியர்கள் உடன்படிக்கையை முறித்து விடுவதும், மேலும்,அவர்கள் குஸாஆ கோத்திரத்தார் மீது தாக்குதல் நடத்திவிடுவதும் சாத்தியமா? அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆம், அல்லாஹ்வின் நுட்பமான ஞானத்திற்கு ஏற்ப அவர்கள் அந்த உடன்படிக்கையை முறித்துள்ளனர்.

மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு தாக்குதலுக்கான அனுமதி இருந்திருக்கவில்லை. மேலும்,உடன்படிக்கையை முறித்ததனால் அந்த அனுமதி கிடைத்து விட்டது. இதுவே அந்த நுட்பமான ஞானமாக இருந்தது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதனால் நல்ல விளைவு வெளிப்படுமா? என்று நான் கேட்டேன். அதற்கு, ஆம்! விளைவு நல்லதாக வெளிப்படும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (ஸேரே ரூஹானீ, அன்வாருல் உலூம், தொகுதி 24, பக்கம் 251 - 252)

இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பனூ பக்ர் மற்றும் குறைஷியர்களின் இந்த அநியாயமான நடவடிக்கைக்குப் பிறகு அம்ர் பின் ஸாலிம் என்பவர் பனூ குஸாஆவின் நாற்பது நபர்களைக் கொண்ட சவாரிகளுடன் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் உதவி வேண்டுவதற்காக புறப்பட்டார். குஸாஆ கோத்திரத்தின் தலைவர் புதைல் பின் வர்காஃ குஸாஇ என்பவரும் அந்தக் கூட்டத்தினருடன் இருந்தார். தங்களுக்கு எவ்வாறு துன்பத்தை எதிர்கொள்ள நேரிட்டது; மேலும் குறைஷியர்கள் எப்படி தங்களுக்கு எதிராக ஆயுதங்கள், ஆட்கள் மற்றும் குதிரைகளைக் கொண்டு பனூ பக்ருக்கு உதவி செய்தனர்? மேலும், எவ்வாறு ஸஃப்வான், இக்ரிமா மற்றும் ஏனைய குறைஷிய தலைவர்கள் இந்த கொலையில் பங்கு பெற்றனர் என்ற விளக்கத்தை அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தார்.

அந்த நேரத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுடன் மஸ்ஜிதில் அமர்ந்திருந்தார்கள். அவர் தமது பேச்சை முடித்த உடனே, அம்ர் பின் ஸாலிம் என்ற குஸாஆ கோத்திரத்தின் தலைவர் எழுந்து நின்றார். அப்போது அவர் சில கவிதைகளை படித்து உதவி வேண்டினார். அவற்றில் ஒரு கவிதை வரி இவ்வாறாகும்;

يَا رَبِّ اِنِّيۡ نَاشِدٌ مُحَمَّدًا حِلۡفَ اَبِيۡنَا وَ اَبِيۡهِ الۡاَتۡلَدَا

பொருள்: எனது இறைவா! நான் எங்களின் மூதாதையர்களுக்கும், அவர்களின் மூதாதையர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையை நான் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு நினைவூட்டுகின்றேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள், அம்ர் பின் ஸாலிம்! உமக்கு உதவி செய்யப்படும்! என்று கூறினார்கள். (ஸூபுலுல் ஹூதா, தொகுதி 5, பக்கம் 202-203, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

பனூ குஸாஆ கோத்திரத்தின் குழு ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்களை வந்தடைந்த போது, உங்களது எண்ணப்படி இந்த அநீதியை யார் செய்துள்ளார்கள்? என்று அன்னார் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். பனூ பக்ர் என்று அவர்கள் கூறினர். அதற்கு, அனைத்து பனூ பக்ர் கோத்திரமுமா செய்துள்ளது?என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு,இல்லை ! பனூ நுஃபாஸாஃ . அதன் தலைவர் நவ்ஃபல் பின் முஆவியா ஆவார் என்று அவர்கள் கூறினர். இவர்கள் பனூ பக்ருடைய ஒரு கோத்திரமே ஆவர் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆக, குஸாஆ கோத்திரத்தார் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அனைத்து விஷயங்களையும் கூறிவிட்டபோது, அன்னார்(ஸல்) நீங்கள் தனித்தனியாக திரும்பி செல்லுங்கள் ; தற்போது நீங்கள் குழுவின் வடிவில் ஒன்றாக திரும்பி செல்ல வேண்டாம் என்று கூறினார்கள்.

அன்னார் (ஸல்) ஏன் இவ்வாறு கூறினார்கள்? என்றால், அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்தித்து விட்டு செல்கின்றனர் என்ற சந்தேகம் எவருக்கும் வரக் கூடாது என்பதற்காக அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள். இந்த விவகாரத்தை அன்னார் (ஸல்) இரகசியமாக வைத்தார்கள். ஆக, பனூ குஸாஆ தனித்தனியாக பிரிந்து திரும்பி சென்று விட்டார்கள். அவர்களில் சிலர் கடற்கரையோரமாக சென்று விட்டனர்.மேலும்,புதைல் பின் வர்காஃ உட்பட சில மக்கள் பொதுவான பாதையில் திரும்பி சென்று விட்டனர்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ஸல்) பனூ கஅப் அதாவது பனூ குஸாஆவின் விவகாரத்தின் காரணமாக மிகவும் கோபப்பட்டார்கள். நான் அன்னாரை இவ்வளவு கடுமையாக கோபப்பட்டு ஒருபோதும் கண்டதில்லை.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு குஸாஆ கோத்திரத்தின் சம்பவத்தைப் பற்றிய தகவல் கிடைத்தபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

எவனது கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இருப்பின் மீது ஆணையாக! நான் எதனைக் கொண்டு எனது மனைவிமார்களையும், வீட்டாரையும் பாதுகாக்கின்றேனோ அதனைக் கொண்டு அவர்களின் ஒவ்வொரு பொருளையும் பாதுகாப்பேன். (ஸூபுலுல் ஹூதா,தொகுதி 5, பக்கம் 203 - 204, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்தப் போரின் விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கியுள்ளார்கள்:

தமது தொனியில் எடுத்துரைக்கின்றார்கள்: ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரமலான் மாதத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது கடைசிப் போருக்காக புறப்பட்டார்கள். அது அரேபியாவில் இஸ்லாத்தை நிறுவி விட்டது. இந்த சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது:

ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதாவது, அரபு கோத்திரங்களில் விரும்புகின்றவர்கள் மக்காவாசிகளுடன் இணைந்து கொள்ளலாம் ; விரும்புகின்றவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் இணைந்து கொள்ளலாம். மேலும், ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் தொடுத்து உடன்படிக்கையை முறித்துக் கொண்டால் தவிர பத்து வருடங்கள் வரை இரு தரப்பும் ஒருவர் மற்றவருக்கு எதிராக போர் புரிவதற்கு அனுமதி கிடையாது. இந்த உடன்படிக்கையின் கீழ் அரபு கோத்திரமான பனூ பக்ர் மக்காவாசிகளுடன் இணைந்து கொண்டது. மேலும் பனூ குஸாஆ கோத்திரம் முஹம்மது (ஸல்) அவர்களுடன் இணைந்து விட்டது. அரேபிய காஃபிர்கள் உடன்படிக்கையை பேணுவதில் குறைவாகவே கவனம் செலுத்தி வந்தார்கள். குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரில்!

ஆக, பனூ பக்ருக்கு பனூ குஸாஆ கோத்திரத்திற்கு எதிரில் பழைய சண்டை இருந்து வந்ததால், ஹுதைபியா உடன்படிக்கையின் சிறிது காலம் கழிந்த பிறகு அவர்கள் மக்காவாசிகளிடம் ஆலோசனை செய்தார்கள். குஸாஆ கோத்திரத்தார் உடன்படிக்கையின் காரணமாக முற்றிலும் நிம்மதியாக இருக்கின்றனர்; தற்போது நமது மக்கள் அவர்களை பழிவாங்க வேண்டும் என்று ஆலோசனை செய்தனர். ஆக, மக்கத்து குறைஷியர்கள் மற்றும் பனூ பக்ர் கோத்திரத்தார் இணைந்து இரவில் பனூ குஸாஆவின் மீது தாக்குதல் நடத்தினர். மேலும், அவர்களின் ஏராளமான நபர்களை

கொன்று விட்டனர். குறைஷியர்கள் பனூ பக்ருடன் இணைந்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர் என்ற விஷயம் குஸாஆ கோத்திரத்தாருக்கு தெரிய வந்தபோது, அவர்கள் நாற்பது நபர்களுடன் வேகமாக ஓடக் கூடிய ஒட்டகங்களில் அமர்ந்து இந்த உடன்படிக்கை மீறப்பட்ட தகவலை தெரிவிப்பதற்காக மதீனாவிற்கு உடனடியாக புறப்பட்டார்கள். மேலும், பரஸ்பர உடன்படிக்கையின் காரணமாக, எங்களுக்காக பழிவாங்குவதும், மக்காவின் மீது போர் தொடுப்பதும் தற்போது தங்களின் கடமையாகும் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அவர்கள் வேண்டினர். இந்தக் குழுவினர் இறைத் தூதர் (ஸல்) அவர்களை சென்றடைந்தபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: உங்களது துன்பம் எனது துன்பமாகும்; நமது உடன்படிக்கையில் நான் நிலைபெற்றுள்ளேன். மேலும் கூறினார்கள்: முன்னால் வந்து கொண்டிருக்கின்ற இந்த மேகம் உள்ளதே! இதிலிருந்து எவ்வாறு மழை பொழிகின்றதோ அதே போன்று உங்களது உதவிக்காக இஸ்லாமியப் படை வந்தடைந்து விடும். (அந்த நேரத்தில் மழை பொழிந்து கொண்டிருந்தது)

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம்,தொகுதி 20, பக்கம் 336 - 337)

ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப, ஹஸ்ரத் ஸம்ரஃ (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குறைஷியர்களிடம் அனுப்பினார்கள். மேலும், மூன்று விஷயங்களில் ஒன்றை மேற்கொள்ளுமாறு கூறினார்கள்:

ஒன்று, பனூ குஸாஆ கோத்திரத்தாருக்கான இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டும். அல்லது பனூ நுஃபாஸஃவுடன் தொடர்பின்மையை வெளிப்படுத்த வேண்டும் அல்லது ஹுதைபியா உடன்படிக்கையை முறித்துக் கொள்ள வேண்டும்.

இவை மூன்று விஷயங்களாகும். ஹஸ்ரத் ஸம்ரஃ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுவராக அவர்களிடம் சென்றார்கள். மஸ்ஜித் ஹராமிற்கு அருகில் ஒட்டகத்தை நிறுத்தினார்கள். மேலும் உள்ளே சென்றுவிட்டார்கள். குறைஷியர்கள் தங்களது இடத்தில் அமர்ந்திருந்தனர். ஹஸ்ரத் ஸம்ரஃ (ரலி) அவர்கள், தாம் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தூதுவர் ஆவேன்; மேலும் உங்களுக்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள் தூதுச் செய்தி வழங்கியுள்ளார்கள் என்று அவர்களிடம் கூறினார்கள். கர்ழஃ பின் அப்தே அம்ர் கூறினார்:நாங்களோ பனூ கஸாஆவிற்குரிய இழப்பீட்டுத் தொகையை செலுத்தி விடுவோம்; ஆனால், எங்களிடமோ தானியங்களும் இருக்காது; கால்நடைகளும் இருக்காது. ஏனெனில், இத்தனை மக்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு ஒரு பெரிய தொகை தேவைப்படும். பனூ நுஃபாஸஃவுடனான தொடர்பை முறித்துக் கொள்வதை பொருத்த வரையிலோ அரேபிய கோத்திரங்களில் பைத்துல்லாஹ்விற்கு அவர்களைப் போன்று கண்ணியமளிக்கக் கூடிய எந்தக் கோத்திரமும் இல்லை. அவர்கள் எங்களது கூட்டாளிகள். நாங்கள் அவர்களுடனான நட்பை முறித்துக் கொள்வதாக அறிவிக்க மாட்டோம். எங்களிடம் ஏதாவது இருக்கும் வரை நாங்கள் அவர்களிடமிருந்து விலகவும் மாட்டோம். ஆயினும், நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் போர் புரிவோம்; நாங்கள் போர் புரிவோம்; எனவே நாங்கள் உடன்படிக்கையையே முறித்துக் கொள்கின்றோம் என்று அவன் கூறிவிட்டான். அதாவது, ஹுதைபியா உடன்படிக்கையை.

ஹஸ்ரத் ஸம்ரஃ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து விட்டார்கள். மேலும் குறைஷியர்களின் கூற்றுகளை அன்னாருக்கு தெரியப்படுத்தினார்கள். எவ்வாறிருப்பினும், குறைஷியர்கள் பின்னர் தங்களது செயலுக்கு வருந்தினார்கள். மேலும் அவர்கள் அபூ ஸுஃப்யானை இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தனர். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 204 - 205, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அவர் வருவது தொடர்பாகவும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னரே கூறிவிட்டான். அதாவது அபூ ஸுஃப்யான் வந்து கொண்டிருக்கின்றார் என்று. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பிற்கு ஏற்ப மக்களுக்கு கூறிவிட்டார்கள்.

ஆக, அபூ ஸுஃப்யான் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக வருகை தந்தார். அதன் விளக்கம் இவ்வாறாகும்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ ஸுஃப்யான் மதீனாவிற்கு வருகை தருவது தொடர்பாக ஸஹாபிகளுக்கு முன்பே கூறிவிட்டார்கள். அபூ ஸுஃப்யான் உங்களிடம் வந்து கொண்டிருக்கின்றார்; உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்ளுங்கள் ; உடன்படிக்கையை நீட்டித்துக் கொள்ளுங்கள் என்று அவர் கூறுவார். ஆனால், அவர் அதிருப்தியுடன் திரும்பி செல்வார். அவரது எந்தக் கூற்றும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: அதாவது ஹாரிஸ் பின் ஹிஷ்ஷாம் மற்றும் அப்துல்லாஹ் பின் அபீ ரபீஅஃ அபூ ஸுஃப்யானிடம் சென்றார்கள். மேலும், இந்த விவகாரத்தில் சமாதானம் செய்து கொள்வது தவிர்க்க முடியாததாகும். ஒருவேளை இந்த விவகாரம் தீர்க்கப்படவில்லையென்றால், பின்னர் முஹம்மது (ஸல்) தமது ஸஹாபிகளுடன் உங்கள் மீது தாக்குதல் தொடுப்பார்கள். ஆக, அபூ ஸுஃப்யான் மற்றும் அவரது அடிமை இரண்டு ஒட்டகங்களில் புறப்பட்டார்கள். அவர் வேக, வேகமாக சென்றார். மேலும், மதீனாவை சென்றடைந்தார். அவர் முதன் முதலில் தமது மகளும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனித துணைவியாருமான உம்மே ஹபீபா (ரலி) அவர்களிடத்தில் சென்றார். தான் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் படுக்கையில் அமர்வதற்கு அபூ ஸுஃப்யான் எண்ணம் கொண்டார். ஆனால், ஹஸ்ரத் உம்மே ஹபீபா (ரலி) அவர்கள் படுக்கையை மடித்து வைத்து விட்டார்கள். எனது மகளே! இந்தப் படுக்கை எனக்கு தகுதி வாய்ந்தது இல்லையா? அல்லது நான் அதற்கு தகுதியானவன் இல்லையா? என்று அபூ ஸுஃப்யான் கேட்டார். அதற்கு, இது இறைத் தூதர் (ஸல்) அவர்களின் படுக்கையாகும் ; நீங்கள் ஓர் இணை வைப்பாளரும், தூய்மையற்றவரும் ஆவீர்கள்; நீங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் படுக்கையில் அமர்வதை நான் விரும்பவில்லை என்று ஹஸ்ரத் உம்மே ஹபீபா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு, எனது மகளே! என்று அவர் கூறினார். அபூ ஸுஃப்யான் கூறினார்: எனது மகளே! எனக்குப் பிறகு உன்னை தீமை பற்றிக் கொண்டு விட்டது. அப்போது, இல்லை! மாறாக, அல்லாஹ் எனக்கு இஸ்லாத்தின் பக்கம் வழிகாட்டி விட்டான். மேலும், எனது தந்தையே! நீங்கள் குறைஷியர்களின் தலைவர் ஆவீர்கள். இஸ்லாத்தை தழுவதை நீங்கள் எப்படி தாமதிக்க முடியும்? என்று உம்மே ஹபீபா கூறினார்கள். அன்னார் அவருக்கு தப்லீஃக் செய்தார்கள். நீங்கள் செவியேற்கவும், பார்க்கவும் முடியாத சிலைகளை வணங்குகின்றீர்கள்;

அபூ ஸுஃப்யான் அங்கிருந்து எழுந்தார்; மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் சென்றுவிட்டார். அந்நேரம் அன்னார் (ஸல்) மஸ்ஜிதில் இருந்தார்கள். அவர் கூறினார்:

முஹம்மதே! (ஸல்) நான் ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது இருக்கவில்லை. தாங்கள் அந்த உடன்படிக்கையை நீட்டித்துக் கொள்ளுங்கள்; மேலும் எங்களுக்காக காலக்கெடுவை நீட்டித்து விடுங்கள்!

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அபூ ஸுஃப்யானே! நீர் இதற்காக மட்டுமே வந்துள்ளீரா? அதற்கு, ஆம்! என்று அவர் கூறினார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: உங்கள் தரப்பிலிருந்து விஷயம் ஏதும் நிகழ்ந்துள்ளதா என்ன ? அதற்கு, அல்லாஹ் காப்பானாக! நாங்கள் எங்களது ஹுதைபிய உடன்படிக்கையில் நிலைத்திருக்கின்றோம்.

நாங்கள் அதில் எவ்வித மாறுதலையும் செய்யவில்லை என்று அவர் தவறான விஷயத்தை கூறினார்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: நாங்களும் எங்களது உடன்படிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் நிலைபெற்றுள்ளோம்.நாங்களும் எதனையும் மாற்றவில்லை; நாங்கள் உடன்படிக்கை செய்தோம்; அது சரிதான்! நாங்களும் எந்த மாற்றமும் செய்யவில்லை.

அபூ ஸுஃப்யான் தனது கூற்றை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார். ஆனால், அன்னார் (ஸல்) அவருக்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை. அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார். நீங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பேசுங்கள்; அல்லது உங்கள் சார்பாக பாதுகாப்பிற்கான அறிவிப்பை மக்களிடம் செய்யுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நானோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடைக்கலத்தில் உள்ளேன். பின்னர், அபூ ஸுஃப்யான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றார். மேலும் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களிடம் எவ்வாறு உரையாடினாரோ அதே போன்று உரையாடினார். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சென்றார். மக்களில் உம்மை விட உறவுகளை பேணுபவர் எவரும் இல்லை ; உடன்படிக்கையின் கால அளவை நீட்டித்து விடுங்கள் ;மேலும் உடன்படிக்கையை புதுப்பித்து விடுங்கள்; உமது தோழர் உமது கூற்றை மறுக்க மாட்டார் என்று அன்னாரிடம் கூறினார். அதற்கு, அன்னார் (ரலி) கூறினார்கள்: எனது பாதுகாப்பு என்பது இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பாதுகாப்பில் உள்ளது. பின்னர் அவர் அங்கேயும் தோல்வியடைந்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் சென்றார் ; மேலும் கூறினார்: அலீயே! நீர் உறவினர்களில் எனக்கு எல்லாரையும் விட நெருங்கிய உறவினர் ஆவீர்; நான் ஒரு முக்கிய பணிக்காக வந்துள்ளேன்; ஆனால், வெறுங்கையுடன் திரும்பி செல்ல விரும்பவில்லை ; நீர் முஹம்மது (ஸல்)

அவர்களிடம் எனக்காக பரிந்துரை செய்!

அன்னார் (ரலி) கூறினார்கள்: அபூ ஸுஃப்யானே! உனக்கு நாசமே! உனக்கு நாசம் உண்டாகட்டும்! என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஒரு விஷயத்தில் முடிவெடுத்து விட்டார்கள் என்றால், பின்னர் அன்னாரிடம் அது குறித்து உரையாடுவதற்கு எங்களுக்கு ஆற்றல் இல்லை. பின்னர் எங்களுக்கு எந்த சக்தியும் கிடையாது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், அவர் கூறினார்: அலீயே! விவகாரம் என் மீது மிகவும் கடுமையாகிவிட்டது; எனக்கு ஏதேனும் ஆலோசனை கொடு!

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அறிந்த வரை உமக்கு எந்த விஷயமும் பயனளிக்காது; எனினும், நீர் பனூ கினானாவின் தலைவர் ஆவீர்; எழுந்திருங்கள்; மேலும், மக்களுக்கு மத்தியில் பாதுகாப்பிற்கான அறிவிப்பை செய்துவிடும்; பின்னர் உமது நகரத்திற்கு திரும்பி செல்லும். அபூ ஸுஃப்யான் மஸ்ஜித் நபவிக்கு சென்றார். மேலும், மக்களே! நான் மக்களுக்கு மத்தியில் பாதுகாப்பிற்கான அறிவிப்பை செய்கின்றேன் ; நீங்கள் எனது உடன்படிக்கையை முறிக்க மாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன் என்று கூறினார்.

அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றார். மேலும், முஹம்மதே! நான் மக்களுக்கு மத்தியில் பாதுகாப்பிற்கான அறிவிப்பை செய்துவிட்டேன் என்று கூறினார். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அபூ ஹன்தலஃவே! இதனை நீர் மட்டுமே கூறிக் கொண்டிருக்கின்றீர்.அதாவது நாங்கள் இது குறித்து எதுவும் கூறவில்லை. இது உமது ஒரு தரப்பிலான அறிவிப்பாகும்.

பின்னர் அவர் தனது ஒட்டகத்தில் சவாரி செய்து திரும்பி சென்று விட்டார். (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 205 - 207,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம், நீங்கள் பேசுங்கள் என்றும் அவர் கூறியிருந்தார். ஆனால், அன்னார் (ரலி) மறுத்து விட்டார்கள். (பேராசிரியர் டாக்டர் அப்துல் அஸீஸ் பின் இப்ராஹீம் அல்உமரீ அவர்களின்முன்தகிஃப் ஸீரத் முஸ்தஃபா (ஸல்) என்ற நூல், பக்கம் 392,தாருஸ் ஸலாம்)

மேலும், இவ்வாறு அபூ ஸுஃப்யான் எந்தவொரு புதிய ஒப்பந்தம் அல்லது ஒருமித்த கருத்தை உருவாக்குகின்ற முயற்சியில் தோல்வியடைந்தவாறு திரும்பி சென்றார். அபூ ஸுஃப்யான் தனது சமுதாயத்தினரிடம் திரும்பி சென்றடைந்த போது, எல்லா விஷயத்தையும் அவர்களிடம் கூறினார். அப்போது, நீர் நன்மைக்கான எந்தவொரு விஷயத்தையும் கொண்டு வரவில்லை என்று அவர்களும் அபூ ஸுஃப்யானை ஏசிபேசினர். (அபூ ஸுஃரஃ அவர்களின் நூல், காத்தமுன் நபிய்யீன், பாகம் 3, பக்கம் 1190, தாரே அத்தராஸ், பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் வரலாற்று ரீதியில் இதனை எடுத்துரைத்துள்ளார்கள்;

இவ்வாறு அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள்: அபூ ஸுஃப்யான் எப்படியாவது முஸ்லிம்களை தாக்குதல் தொடுப்பதிலிருந்து விலக்கி வைக்க வேண்டும் என்று மக்காவாசிகள் அவரை மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அபூ ஸுஃப்யான் மதீனா சென்றடைந்து, நான் ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்த நேரத்தில் இருக்கவில்லை ; எனவே புதிதாக உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்று அவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கத் துவங்கினார். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவரது கூற்றுக்கு எந்த பதிலும் வழங்கவில்லை. ஏனெனில், பதில் கொடுப்பதால் இரகசியம் வெளிப்பட்டு விடும். அபூ ஸுஃப்யான் நிராசையடைந்த நிலையில், பதற்றமடைந்து மஸ்ஜிதில் நின்று கொண்டு அறிவிப்பு செய்தார்; மக்களே! நான் மக்காவாசிகள் தரப்பிலிருந்து புதிதாக உங்களுக்கு பாதுகாப்பிற்கான அறிவிப்பை செய்கின்றேன்.

இதனைக் கேட்டு விட்டு முஸ்லிம்கள் அவரது முட்டாள்தனத்தின் மீது நகைத்தனர். மேலும், அபூ ஸுஃப்யானே! இந்த விஷயத்தை நீர் ஒரு தரப்பின் சார்பாக கூறுகின்றீர்; நாங்கள் அப்படி எந்த உடன்படிக்கையும் உம்முடன் செய்யவில்லை. (தீப்பாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம்,தொகுதி 20, பக்கம் 337)

இது குறித்து நமது ஆய்வுக் குழுவினர் ஒரு குறிப்பு ஒன்றை எழுதுகின்றார்கள்:

நான் ஹுதைபியா உடன்படிக்கையின்போது இடம் பெற்றிருக்கவில்லை என்று அபூ ஸுஃப்யான் கூறுவது என்பது, அவர்களைப் பொருத்த வரை இது உண்மைக்கு மாறானது;அல்லது சில மக்கள் எழுதியும் இருக்கலாம். அதனால் அவர்கள் இந்தக் கருத்தை எடுத்துக் கொண்டார்கள். பொதுவாக புரிபவர்களுக்கு இதுவோ அவசியமில்லை. ஆனால், வரலாற்று விவகாரங்களில் ஆழமாக செல்ல விரும்புகின்றவர்கள் அநேகமாக நான் அப்போது இடம் பெற்றிருக்கவில்லை என்று கூறுவது உண்மைக்கு மாறானதா? என்று அவர்கள் கேள்வி எழுப்புவார்கள். ஏனெனில், வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாறு நூல்கள் சிலவற்றில் அந்த சந்தர்ப்பத்தில் அதாவது மதீனாவிற்கு அபூ ஸுஃப்யான் வந்திருந்தபோது நான் ஹுதைபியா உடன்படிக்கையின் நேரத்தில் இருக்கவில்லை என்று அவர் கூறியது இடம் பெற்றிருக்கின்றது. ஆனால், பெரும்பாலான நூல்கள் மௌனம் காக்கின்றன. மேலும், பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள் அபூ ஸுஃப்யானின் இந்த கூற்றை குறிப்பிடவில்லை.

மூன்றாவது விஷயம் இதுவாகும். அதாவது, ஹுதைபியா உடன்படிக்கையின் நேரத்தில் உண்மையிலேயே அபூ ஸுஃப்யான் இருந்திருக்கவில்லையா? வாக்தீயுடைய நூலான அல்மகாஸீ, ஸீரத் ஹல்பியா,மற்றும் வேறு சில நூல்களில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது:

அவர் அந்த நேரத்தில் இருந்திருக்கவில்லை. ஆனால், வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாற்றின் பெரும்பாலான நூல்களில் இந்த விஷயம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது ஹுதைபியா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தின் போது, நாங்கள் போர் புரிவதற்காக வரவில்லை என்பதை அபூ ஸுஃப்யான் மற்றும் குறைஷியர்களுக்கு கூறுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மக்காவிற்கு அனுப்பியிருந்தார்கள். இதிலிருந்து இந்த விஷயம் தெரிய வருகின்றது: அதாவது, அபூ ஸுஃப்யான் அந்நேரத்தில் இருந்தார் என்று. எனினும், சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது, அவரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடமும் உரையாட வரவில்லை ; உடன்படிக்கை செய்வதற்கு நேரில் வரவுமில்லை. ஆனால், அவர் தான் குறைஷியர்களின் தலைவராக இருந்தார். உடன்படிக்கையில் அவரது கையொப்பமோ அல்லது சாட்சியமோ இடம் பெறவில்லை. எனவே, ஹுதைபியா உடன்படிக்கையின் நேரத்தில் இருக்கவில்லை என்று அவர் மதீனாவில் கூறியது சாத்தியமானதாகும். இதிலிருந்து அவர் கூறியதன் பொருள் இவ்வாறாகும். அதாவது உடன்படிக்கை எழுதப்பட்ட சந்தர்ப்பத்தில் இருக்கவில்லை என்பதோ அல்லது சம்பவ இடத்தில் அங்கு நான் இருக்கவில்லை என்பது பொருளாக இருக்கும். இதனையும் மதீனாவில் வந்து கூறியிருக்கலாம். எனது கையொப்பம் அதில் இல்லை என்ற இந்த விஷயத்தை அவர் மீண்டும் கூறியிருக்கலாம்.

எவ்வாறிருப்பினும், நான் கூறியது போன்று இது ஆய்வுக் குழுவினரின் எண்ணமாகும். ஆனால், தாமாகவே இந்த அனைத்து விவரங்களையும் எடுத்துரைக்கின்றனர். அவர் உடன்படிக்கையில் பங்குபெற்றிருக்கவில்லை ; ஏனெனில் அவர் தலைவராக இருந்த பின்னரும் உடன்படிக்கையில் அவரது கையொப்பம் இடம் பெற்றிருக்கவில்லை என்று கூறி அதனை அதாவது தங்களது இந்த எண்ணத்தையும் மறுக்கின்றனர். மேலும், இவ்வாறு எழுதுகின்றனர். இதனையே அபூ ஸுஃப்யானே காரணமாக ஆக்கியிருப்பார். எனவே எந்த ஐயமும் கொள்வதற்கு அவசியமில்லை. நான் உடன்படிக்கையில் பங்கு பெற்றிருக்கவில்லை என்று அவர் மதீனாவிற்கு வருகை தந்து கூறிய இந்த விஷயத்தில் எந்த ஐயமும் கொள்வதற்கு அவசியமில்லை. இதனை அவர் கூறியிருந்தார் என்றால் அது சரியானதாக இருந்தது. ஆயினும், கலந்து கொள்ளுதல் மற்றும் இடம் பெறுதல் என்ற சொற்களை கூறுவதில் அறிவிப்பாளருக்கு தவறும் நிகழ்ந்திருக்க முடியும். ஆனால், சம்பவங்கள் இந்த விஷயத்தை அதிகம் சரியானதாக எடுத்துரைக்கின்றன. அதாவது, அவர் தமது இந்த உடன்படிக்கையில் பங்குபெறவில்லை என்று அறிவிப்பு செய்திருந்தார். இந்த விஷயமே முன்னால் வருகின்றது. மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த விஷயத்தை எழுதியுள்ளார்கள்:

அவர் இதனை கூறினார். மேலும் அன்னார் (ரலி) அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். மேலும், இதுவே சரியானதாக தோன்றுகின்றது. அதாவது, அவர் உடன்படிக்கையில் பங்கு பெற்றிருக்கவில்லை. மேலும், அதனை நாம் இவ்வாறே புரிந்து கொள்கின்றோம். அதாவது அதன் பொருள் இதுவே ஆகும். அதாவது நான் இடம் பெற்றிருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும், இதுவோ ஒரு வரலாற்று நிகழ்வின் விவகாரமாக இருந்தது. இதனை நான் எடுத்துரைத்து விட்டேன். எனவே இதில் எந்த ஐயம் கொள்வதற்கும் அவசியமுமில்லை ;அப்படி எந்த கேள்வியும் எழவுமில்லை. இந்த விஷயம் மிகவும் தெளிவானதாக உள்ளது.

எவ்வாறிருப்பினும், இந்த போருக்கு செல்வதன் விளக்கம் தொடர்பாக

எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் இரகசியமாக பயணத்திற்கு ஆயத்தமாவதை தொடங்கி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுக்கு பயணத்திற்கு தயாராகும்படி கட்டளையிட்டார்கள். ஆனால், எங்கு செல்ல வேண்டும்? என்ற விஷயத்தை கூறவில்லை. அதே போன்றே, பயணத்தில் செல்வதற்கு எனக்கான ஏற்பாட்டை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இவ்வாறு கூறிவிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியில் சென்று விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் தமது மகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பயணத்திற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஏதேனும் போருக்கு செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளார்களா? என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் வினவினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மௌனம் காத்தார்கள். பின்னர்,அநேகமாக ரோமானியர்களை நோக்கி செல்வதற்கு எண்ணம் கொண்டிருப்பார்கள் அல்லது நஜத் வாசிகளிடம் செல்வதற்கு எண்ணம் கொண்டிருப்பார்கள் அல்லது குறைஷியர்களை நோக்கி செல்வதற்கு எண்ணம் கொண்டிருக்கக் கூடும்: ஆனால் அவர்களுடனோ இன்னும் உடன்படிக்கைக்கான கால அளவு எஞ்சியிருக்கின்றது என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களோ அன்னாரின் அனைத்து கேள்விகளின்போதும் அமைதியாக இருந்தார்கள். மேலும் எந்த பதிலும் கொடுக்கவில்லை.

இதற்கிடையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்காவது புறப்படுவதற்கு எண்ணம் உள்ளதா? என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். பின்னர், ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள், தாங்கள் பனூ ஸஃபர் அதாவது ரோமானியர்களை நோக்கி செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று வினவினார்கள். இல்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். தாங்கள் நஜதை நோக்கி செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். இல்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

தாங்கள் குறைஷியர்களை நோக்கி செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது, உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் உடன்படிக்கை இல்லையா? என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதாவது ஹுதைபியா உடன்படிக்கை. அன்னார் (ஸல்) கூறினார்கள்: அவர்கள் பனீ கஅப் அதாவது குஸாஆ கோத்திரத்தாருடன் என்ன என்ன செய்தனர்? என்பதை நீர் அறியவில்லையா? (மூஸா பின் உக்பா அவர்களின் நூல்-முகாஸீ ஸய்யிதுனா முஹம்மது (ஸல்) தொகுதி 3, பக்கம் 119 -121)

இந்த சம்பவத்தை மேலும் விளக்கியவாறு, ஸீரத் ஹல்பியாவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) அவர்கள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் பயணம் மேற்கொள்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்களா? என்று கேட்டார்கள். ஆம், என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்படியென்றால் பின்னர் நானும் தயார் ஆகட்டுமா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஆகட்டும்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்கு செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளீர்கள்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வினவினார்கள். குறைஷியர்களுக்கு எதிராக என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அபூ பக்ரே இந்த விஷயத்தை தற்போது ரகசியமாக வையுங்கள் என்றும் அத்துடன் அன்னார் (ஸல்) கூறினார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தயாராகுமாறு மக்களுக்கு கட்டளையிட்டார்கள். ஆனால், தாம் எங்கு செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளார்கள் என்பதை அன்னார் (ஸல்) மக்கள் அறியாதபடி வைத்துக் கொண்டார்கள். இதன் பிறகு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கிராமங்கள் மற்றும் சுற்றுவட்டாரங்களில் இருந்த முஸ்லிம்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். மேலும், எந்த நபர் அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளாரோ அவர் ரமலான் மாதத்தில் மதீனாவிற்கு வந்து விட்டும் என்று அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அறிவிப்பிற்கு ஏற்ப அரேபிய கோத்திரங்கள் மதீனாவிற்கு வரத் துவங்கி விட்டனர். மதீனாவிற்கு வந்தடைந்த கோத்திரங்களில் பனூ அஸ்லம்,பனூ ஃகஃப்ஃபார்,பனூ முஸய்யினா, பனூ அஷ்ஜஅஃ மற்றும் பனூ ஜுஹைய்னா ஆகியோர் ஆவர்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 107-108, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அழைத்து ஆலோசனை செய்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்து ஆலோசனை செய்தார்கள். மேலும் பின்னர் அனைத்து முஸ்லிம்களையும் பயணத்திற்கு தயாராகும்படி கட்டளையிட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா,தொகுதி 5, பக்கம் 208, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்த சம்பவத்தை குறிப்பிட்டவாறு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது ஒரு துணைவியாரிடம் கூறினார்கள்: எனது பயணத்திற்கான பொருட்களை கட்டி வைக்க துவங்குங்கள். அன்னார் (ரலி) பயணத்திற்கு தேவையான பொருட்களை கட்டத் துவங்கிவிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: எனக்காக ஸத்து எனும் ஒருவகை உணவை அல்லது பருப்புகள் போன்றவற்றை வறுத்து .தயார் செய்வீராக! இதுபோன்ற உணவுகளே அந்த நாட்களில் இருந்து வந்தன. ஆக, அவர்கள் மண் போன்ற தூசிகளை தானியங்களில் இருந்து அகற்றத் துவங்கி விட்டார்கள். தானியங்களை சுத்தம் செய்ய துவங்கி விட்டார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் வீட்டில் மகளிடம் சென்றார்கள். மேலும், அவர்கள் இந்த தயாரிப்புகள் செய்து கொண்டிருப்பதை அன்னார் (ரலி) கண்டபோது, ஆயிஷாவே! இந்த என்ன நடந்து கொண்டிருக்கின்றது? என்று கேட்டார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஏதாவது பயணம் மேற்கொள்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்களா? பயணத்திற்கான ஏற்பாடாகவே தோன்றுகின்றது . அன்னார் (ஸல்) பயணத்திற்கான தயாரிப்புகளை செய்யுமாறு கூறினார்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஏதாவது போருக்கான எண்ணம் இருக்கின்றதா? என்று ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

எனக்கு எதுவும் தெரியாது; மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள், எனது பயணத்திற்கான ஏற்பாட்டை செய்யுங்கள் என்று கூறினார்கள்; நாங்கள் அவ்வாறு செய்கின்றோம் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் நாங்களோ பொருட்களை தயார் செய்து கொண்டிருக்கின்றோம்; எங்கு செல்கின்றார்கள்; எதற்காக செல்கின்றார்கள்? என்று எமக்கு தெரியாது என்று கூறினார்கள். இரண்டு, மூன்று நாட்களுக்கு பிறகு அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், கூறினார்கள்: பாருங்கள்! குஸாஆ கோத்திரத்தைச் சேர்ந்த நபர்கள் இவ்வாறு வந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறு சம்பவம் நிகழ்ந்துள்ளது ; மேலும், எனக்கு இறைவன் இந்த சம்பவத்தை குறித்து முன்னரே செய்தி வழங்கியிருந்தான்; அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்துள்ளனர். மேலும், நாமோ அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கின்றோம். தற்போது, நாம் அஞ்சி விடுவதும், மக்காவாசிகளின் வீரத்தையும், ஆற்றலையும் கண்டு அவர்களுடன் போர் புரிய தயாராகாமல் இருப்பதும் ஈமானிற்கு எதிரானதாகும்.எவ்வாறிருப்பினும், நாம் அங்கு செல்ல வேண்டும்;உங்களது கருத்து என்னவாக உள்ளது?

ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களோ அவர்களுடன் உடன்படிக்கை செய்துள்ளீர்கள்; அடுத்து, அவர்கள் தங்களின் சமுதாயத்தினர் ஆவார்கள்.

தாங்கள் உங்களது சமுதாயத்தையே கொல்வீர்களா? என்பது அதன் பொருளாக இருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாம் எமது சமுதாயத்தை கொல்லப்போவதில்லை ; உடன்படிக்கையை முறித்தவர்களை கொல்வோம். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கோ அன்னாரின் இயல்பு அத்தகையதாக இருந்தது. அன்னார் (ரலி) கூறினார்கள்: பிஸ்மில்லாஹ்! இந்த நாள் எப்போது வரும்? மேலும் நாங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக நிராகரிப்பாளர்களுடன் போரிடுவோம் என்று

*திருக்குர்ஆனிலிருந்து...*

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நானோ அனுதினமும் துஆக்கள் செய்து கொண்டிருக்கின்றேன்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூ பக்ர் (ரலி) மிகவும் மென்மையான இயல்பு படைத்தவர்; ஆனால், உண்மையான கூற்று உமரின் நாவிலிருந்து வெளிப்படுகின்றது. சரியான விஷயத்தை உமரே கூறியிருக்கின்றார். கூறினார்கள்: ஆயத்தமாகுங்கள்! பின்னர் அன்னார் (ஸல்) , அல்லாஹ் மற்றும் அவரது தூதரின் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் ரமலானின் துவக்க நாட்களில் மதீனாவில் ஒன்று கூடட்டும் என்று அக்கம் பக்கத்திலுள்ள கோத்திரங்களில் அறிவிப்பு செய்தியை அனுப்பினார்கள். ( ஸேரே ரூஹானீ, (7), அன்வாருல் உலூம், தொகுதி 24, பக்கம் 260- 261)

அன்னார் (ஸல்) இந்த பயணத்தை இரகசியமாக வைப்பதற்காக பல்வேறு திட்டங்களை மேற்கொண்டார்கள். ஆக, அன்னார் (ஸல்) பயணத்திற்கு முன்பு எட்டு நபர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை ஹஸ்ரத் அபூ கத்தாதஃ பின் ரிப்ஈ (ரலி) அவர்களின் தலைமையில் இஸம் பள்ளத்தாக்கை நோக்கி, மக்காவிற்கு எதிர் திசையில் அனுப்பி வைத்தார்கள். யூகம் கொள்பவர் அன்னார் (ஸல்) இந்த திசையில் செல்வதற்கு முடிவு எடுத்துள்ளார்கள் என்று யூகம் கொள்ளட்டும் என்பதற்காகவும், செய்தி பரவி விடக் கூடாது என்பதற்காகவும் அவ்வாறு செய்தார்கள். இஸம் மதீனாவில் இருந்து இருபத்தி ஆறு மைல் தொலைவில் கிழக்குப் பக்கம் நஜதில் உள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். (ஸீரத் இன்ஸைக்லோபீடியா,தொகுதி 9,பக்கம் 111,தாருஸ் ஸலாம்)

இது மட்டுமின்றி,அன்னார் (ஸல்) மதீனாவின் சுற்று வட்டாரத்தில் சில நபர்களை அனுப்பினார்கள். மேலும் யாராவது அந்நிய நபர் மக்காவை நோக்கி சென்று கொண்டிருந்தால் அவரை திருப்பி அனுப்பி வைப்பது அவர்கள் அனைவரின் டியூட்டியாக இருந்தது. இந்த அனைத்து பணிகளையும் கண்காணிப்பு செய்வதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அன்னார் (ஸல்) நியமித்தார்கள். அவர்கள் கண்காணிப்பாளராக சுற்றி வர வேண்டும். இந்த அனைத்து திட்டங்களையும் மேற்கொண்ட பிறகு, அன்னார் (ஸல்) தமது இறைவனின் சன்னிதானத்தில் துஆவிற்காக கரத்தை உயர்த்தினார்கள்: மேலும் கூறினார்கள்: اَللّٰهُمَّ خُذْ عَلٰى أَسْمَاعِهِمْ وَأَبْصَارِهِمْ

فَلَا يَرَوْنَا إِلَّا بَغْتَةً وَلَا يَسْمَعُوْنَ بِنَا إِلَّا فَجْأَةً

பொருள்: அல்லாஹ்வே! குறைஷியர்களின் காதுகளையும், அவர்களின் கண்களையும் தடுத்து நிறுத்திவிடுவாயாக! அதாவது அவர்களின் உளவாளிகளை தடுத்து விடுவாயாக. அவர்கள் எங்களை பார்க்க முடியாதபடி செய்து விடுவாயாக! ஆனால், நாங்கள் திடீரென அவர்கள் வரை சென்றடைந்து விட வேண்டும்; மேலும் எங்களை குறித்து எந்த செய்தியையும் அறிந்து கொள்ளக் கூடாது; திடீரென அவர்களுக்கு எங்களின் செய்தி சென்றடைய வேண்டும்.

(டாக்டர் ஸலாபி அவர்களின் நூல், ஸீரதுன் நபிய்யீன்(ஸல்) தொகுதி 3, பக்கம் 384-385)

அன்னார்(ஸல்) அவர்களின் மற்றொரு துஆவும் இதனை ஒத்ததாக இருக்கின்றது. அது இதுவாகும்: اَللّٰهُمَّ خُذِ الْعُيُوْنَ وَالْأَخْبَارَ عَنْ

قُرَيْشٍ حَتّٰى نَبْغَتَهَا فِيْ بِلَادِهَا

பொருள்: அல்லாஹ்வே! குறைஷியர்களின் உளவாளிகள் மற்றும் அவர்களின் ஒற்றர்களின் தடுத்து நிறுத்துவாயாக. எதுவரை என்றால், அவர்கள் எங்களை தங்களது பகுதிகளில் திடீரென காண வேண்டும். (தாரீக் அத்திப்ரா, தொகுதி 2, பக்கம் 155, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இதன் பிறகு அன்னார் (ஸல்) பயணத்தை துவங்கி விட்டார்கள். இது கூடுதல் விளக்கமாகும். இன்ஷா அல்லாஹ் இனிவரும் நாட்களிலும் தொடரும்!

தற்போது நான் உலகின் பொதுவான நிலைமைகளை குறித்தும் கூற விரும்புகின்றேன். துஆ செய்து கொண்டிருங்கள்! என்று பெரும்பாலும் கூறுகின்றேன்.

போர் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. மேலும், அல்லாஹ்வே! அதன் நாசத்திலிருந்து எங்களை பாதுகாப்பாக வைப்பாயாக! என்று அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள்.ஏனெனில், தற்போதோ, ஈரான் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. மேலும், இந்த போரின் நிலவரம் அபாயகரமான நிலையை எட்டி விட்டது. இஸ்ரேலிய அரசாங்கத்தின் இந்த மக்கள், ஒவ்வொரு நாடாக அனைத்து முஸ்லிம் நாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்றே விரும்புவர். ஆனால், முஸ்லிம் நாடுகளோ உறங்கிக் கொண்டிருக்கின்றனர். மேலும், தமது முன்னேற்றம் மற்றும் இதர முன்னுரிமைகளில் அவர்கள் மூழ்கிக் கிடக்கின்றனர். மேலும், என்ன நிகழ உள்ளது? என்பதைப் பற்றிய புரிதல் அவர்களுக்கு இல்லை. முஸ்லிம்களிடமோ அமலும் இல்லை ; துஆவின் பக்கம் அவர்களுக்கு கவனமும் இல்லை. மேலும் அதுபோன்ற நிலையில் என்ன பாதிப்பு ஏற்பட இருக்கின்றதோ அதனைக் குறித்த அனுமானமும் இவர்களால் செய்ய முடியாது.

அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! ; மேலும், இவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தட்டுமாக! மேலும் தங்களது ஒற்றுமையை நிறுவுவதற்கு முயற்சி செய்யட்டுமாக! இன்ன பிரிவாக இருக்கின்றது; இன்ன பிரிவாக இருக்கின்றது. எனவே நாங்கள் அதற்கு உதவி செய்ய மாட்டோம் என்ற நிலை இருக்கக் கூடாது. அனைவரும் ஆபத்தில் இருக்கி.ன்றனர். ஏனெனில், اَلْكُفْرُ مِلَّةٌ وَاحِدَةٌ

என்ற நிலை ஆகிவிட்டது. நிராகரிப்பாளர்கள் அனைவரும் ஒன்றுபட்ட மார்க்கத்தினராக ஆகிவிட்டனர். மேலும், முஸ்லிம்களும் ஒன்றுபட்ட சமுதாயமாக ஆக வேண்டும். அப்போதுதான் அவர்கள் தப்பிக்க முடியும். அதனைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை.

அல்லாஹ் ஒவ்வொரு அப்பாவியையும். ஒவ்வொரு அநீதியிழைக்கப்பட்டவரையும் பெரும் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பானாக! மேலும், நாம் துஆக்களின் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்.அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜுலை 4, 2025, பக்கம் 2 -6)

தமிழாக்கம்
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**நபிமொழியிலிருந்து...**

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

## 1- ம் பக்கத் தொடர்ச்சி....(தஃப்ஸீரே கபீர்)

அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தது? இது தொடர்பாக வரலாற்று ரீதியாக அதிக தகவல்கள் இல்லை. ஆனால், நபித்துவ வாதத்திற்கு பிறகு, மக்கத்து மக்கள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயிரை பறிக்கும் பகைவர்களாக ஆகிவிட்டனர். ஒரு நபர் அபூ ஜஹலிடமிருந்து சிறிது பணம் வசூல் செய்ய வேண்டியிருந்தது. ஆனால், அவன் கொடுக்காமல் இருந்து வந்தான். அவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும், கூறினார்: தாங்கள் ஹில்ஃபுல் புஹூல் அமைப்பில் இணைந்து விட்டீர்கள்; எப்போதும் அநீதியாளர்களுக்கு உதவி செய்வதாக தாங்கள் சத்தியம் செய்திருந்தீர்கள்; நான் தங்களுக்கு தங்களுடைய உடன்படிக்கை நினைவூட்டியவாறு, எனக்கு அபூ ஜஹல் சிறிது பணம் கொடுக்க வேண்டியுள்ளது; தாங்கள் அவனிடம் செல்லுங்கள்; எனக்கு இந்த பணத்தை பெற்றுத் தாருங்கள் என்று அவர் விண்ணப்பித்தார். அபூ ஜஹல் அன்னாரின் கடும் எதிரியாக இருந்தான்; அவன் அன்னாருக்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தவும் சாத்தியம் இருந்தது. ஆயினும்,அன்னார் (ஸல்) உடனடியாக எழுந்தார்கள்; அவருடன் சென்று அபூ ஜஹலின் வீட்டை சென்றடைந்தார்கள்; மேலும் கதவைத் தட்டினார்கள். மேலும் இந்த நபரிடமிருந்து நீ சிறிது பணத்தை வாங்கியுள்ளாய்; அதனை உடனடியாக கொடுத்து விடு என்று கூறினார்கள். அபூ ஜஹல் உடனடியாக உள்ளே சென்றான்; மேலும் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து அவரிடம் ஒப்படைத்து விட்டான். எவ்வாறிருப்பினும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹில்ஃபுல் புஹூல் இயக்கத்தின் உடன்படிக்கைக்கு மதிப்பளித்து ஓர் அநீதியிழைக்கப்பட்ட நபரின் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக பயங்கரமான அபாயத்தையும் பொருட்படுத்தாதவாறு அவனிடம் சென்றபோது உண்மையின் திகலானது அவனது தீய ஆன்மாவை நசுக்கி விட்டது. மேலும் அவன் அநீதியிழைக்கப்பட்டவரின் உரிமையை கொடுப்பதற்கு தயாராகிவிட்டான். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 133 - 134, காதியான் பதிப்பு, 2010-ம் ஆண்டு) * * * * * * * *

## 12- ம் பக்கத் தொடர்ச்சி.... (குத்பா பேருரை 20.06.25)

அன்னார் (ஸல்) அந்த இருவரையும் அழைத்தார்கள். மேலும், சந்திப்பிற்கான வாய்ப்பை வழங்கினார்கள். இருவரும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். மேலும், பின்னர் அவர்கள் இஸ்லாத்தில் மிக சிறப்பாக நிலை நின்றார்கள்.

அபூ ‘ஸுஃப்யான் பின் ஹாரிஸ் அவர்களின் அறிமுகம் இவ்வாறாகும். அதாவது முன்னர் கூறப்பட்டது போன்று, இந்த அபூஸுஃப்யான் வேறு ஒருவர் ஆவார். இஸ்லாத்தின் வரலாற்றில் அபூ ஸுஃப்யான் என்ற பெயர் கொண்ட இரண்டு நபர்கள் மிகவும் பிரபல்யமானவர்கள் ஆவர். ஒரு அபூ ஸுஃப்யான் மக்கத்து குறைஷிகளின் தலைவராக இருந்தார்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)**

தமிழாக்கம்
மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**மக்கா வெற்றிப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

ஒரு ஸஹாபி தனது அறியாமையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மக்கா பயணம் பற்றிய தகவலை மக்காவாசிகளுக்கு கொடுப்பதற்கு முயன்றார்கள். ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதனைப் பற்றிய தகவலை கொடுத்து விட்டான். மேலும், இவ்வாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த திட்டத்தைப் பற்றி காஃபிர்களுக்கு தகவல் சென்றடைய முடியாமல் போனது

ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ யல்தஅஃ (ரலி) என்பது அந்த ஸஹாபியின் பெயர் ஆகும்

அன்னார் (ரலி) அந்தக் கடிதத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்தார்கள். அவளுக்கு முஸய்யினா கோத்திரத்தாருடன் தொடர்பு இருந்தது. அந்தப் பெண்ணின் பெயர் கனூத் அல்லது ஸாரஃ என்பதாக இருந்தது. இவள் பனூ அப்துல் முத்தலிப் கோத்திரத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபரின் அடிமைப் பெண்ணாக இருந்தாள். இந்தக் கடிதத்தை மக்காவாசிகள் வரை சென்றடையச் செய்வதற்காக அவளுக்கு அன்னார் (ரலி) ஊதியத்தை நிர்ணயித்திருந்தார்கள். மேலும், முடிந்த வரை இந்தக் கடிதத்தை இரகசியமாக வையுங்கள் என்று அன்னார் (ரலி) கூறியிருந்தார்கள்

---

மதீனாவிலிருந்து இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தலைமையில் படை புறப்பட்டபோது, அதில் உயிரை அர்ப்பணிக்கக் கூடிய சுமார் எழாயிரத்து நானூறு நபர்கள் இடம் பெற்றிருந்தனர். பனூ அஸத் மற்றும் ஸுலைம் போன்ற கோத்திரத்தாரும் பங்கு பெற்றதால் அந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால், மக்காவின் சாலையில் சென்று கொண்டிருக்கும்போது அந்த எண்ணிக்கை பத்தாயிரம் ஆகிவிட்டது

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ரமலானில் வெற்றிப் போருக்கு புறப்பட்டார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னார் (ஸல்) மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையில் 42 மைல் தொலைவில் இருக்கின்ற மேலும் குதைத் மற்றும் உஸ்ஃவானுக்கு இடையில் உள்ள கதீத் நீரூற்றை அடைந்தபோது, அன்னார் (ஸல்) நோன்பு திறந்து விட்டார்கள்

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 ஜுன் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **20 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மக்காப் போர் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அதற்காக புறப்படுவதற்கு முன்னதாக நிகழ்ந்த ஒரு சம்பவத்தை குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது. ஒரு ஸஹாபி தனது அறியாமையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பயணத்தின் தகவலை மக்காவாசிகளுக்கு கொடுப்பதற்கு முயன்றார்கள் என்ற குறிப்பில் அதில் கிடைக்கின்றது. ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதனைப் பற்றிய தகவலை கொடுத்து விட்டான். மேலும், இவ்வாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த திட்டத்தைப் பற்றி காஃபிர்களுக்கு தகவல் சென்றடைய முடியாமல் போனது.

இதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: மதீனாவில் மக்காவிற்கு செல்வதற்கான தயாரிப்புகள் தொடங்கிவிட்டபோது, மதீனாவில் தங்கியிருந்த ஒரு பத்ர் போர் ஸஹாபி- ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ யல்தஅஃ (ரலி) என்பது அவர்களின் பெயர் ஆகும். அன்னார் குறைஷியர்களின் தரப்பிற்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் உங்கள் பக்கம் புறப்படுவதற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கியுள்ளார்கள் என்று எழுதியிருந்தார்கள். அன்னார் (ரலி) அந்தக் கடிதத்தை ஒரு பெண்ணிடம் ஒப்படைத்தார்கள். அவளுக்கு முஸய்யினா கோத்திரத்தாருடன் தொடர்பு இருந்தது. அந்தப் பெண்ணின் பெயர் கனூத் அல்லது ஸாரஃ என்பதாக இருந்தது. இவள் பனூ அப்துல் முத்தலிப் கோத்திரத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபரின் அடிமைப் பெண்ணாக இருந்தாள். இந்தக் கடிதத்தை மக்காவாசிகள் வரை சென்றடையச் செய்வதற்காக அவளுக்கு அன்னார் (ரலி) ஊதியத்தை நிர்ணயித்திருந்தார்கள். மேலும், முடிந்த வரை இந்தக் கடிதத்தை இரகசியமாக வையுங்கள் என்று அன்னார் (ரலி) கூறியிருந்தார்கள். மேலும், பொதுப் பாதையின் வழியாக செல்வதையும் அன்னார் (ரலி) தடுத்திருந்தார்கள். ஏனெனில் அங்கு காவல் இருந்தது. அந்த பெண் கடிதத்தை தலையின் உச்சியில் வைத்துக் கொண்டார். மேலும், கொண்டையில் முடிந்து கொண்டார். பின்னர் கடிதத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களை நோக்கி ஒரு எப்படிப்பட்ட படையை எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால், அது இரவிற்கு ஒப்பானதாகும் என்ற செய்தி அதில் இடம் பெற்றிருந்தது. அதாவது மாபெரும் படை இருக்கின்றது. மேலும், காட்டாற்று வெள்ளத்தைப் போன்று வேகமாக வந்து கொண்டிருக்கின்றது. மேலும் நான் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்; அன்னார் (ஸல்) உங்களை நோக்கி தனியாக புறப்பட்டாலும், அல்லாஹ் நிச்சயமாக அன்னாருக்கு உதவி செய்வான்.மேலும், அந்த இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் செய்திருக்கின்ற தனது வாக்குறுதியை முழுமை செய்தே தீருவான். எனவே நீங்கள் உங்களது ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறும் எழுதப்பட்டுள்ளது: முஹம்மது (ஸல்) அவர்கள் படையை அழைத்துக் கொண்டு புறப்பட இருக்கின்றார்கள் உங்கள் பக்கமா? அல்லது உங்கள் பக்கம் அன்றி வேறு ஒருதரப்பின் பக்கமா ? என்பதை கூறமுடியாது. எவ்வாறிருப்பினும், நீங்கள் உங்களுடைய முழுமையான முன்னெச்சரிக்கை ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள். இந்த செய்தியின் மூலம் உங்கள் மீது நான் செய்த ஒரு உபகாரம் இருக்கட்டும் என்று நான் விரும்பினேன். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா, பரிவாயத்துல் இமாமுல் புஹாரீ, பக்கம் 136, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

மற்றொரு பக்கம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒப்புக் கொள்ளப்பட்ட துஆவின் விளைவாக அல்லாஹ் அந்தக் கடிதத்தைப் பற்றிய தகவலை அன்னாருக்கு வழங்கிவிட்டான். ஆக, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் சுயமே இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: இறைத்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

தூதர் (ஸல்) என்னையும், அபூ மர்ஸத் கனவீ மற்றும் ஸுபரையும் அனுப்பினார்கள். நாங்கள் அனைவரும் குதிரையில் சவாரி செய்து சென்றோம். அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் புறப்படுங்கள்; எதுவரை என்றால், நீங்கள் ரவ்ஸாயே காஃஹ் - என்ற இடம் வரை. அங்கு சென்றடைந்தோம். இது மதீனா மற்றும் மக்காவிற்கு இடையில் உள்ள ஓர் இடமாகும். அங்கு இணை வைப்பாளர்களைச் சேர்ந்த ஒரு பெண் இருப்பார். அவரிடத்தில் ஹாதிப் பின் அபீ பல்தஃ சார்பாக இணை வைப்பாளர்களின் பெயரில் ஒரு கடிதம் ஆகும். ஆக, எந்த இடத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்களோ அந்த இடத்தில் அவளை நாங்கள் பிடித்து விட்டோம். அவள் தனது ஒட்டகத்தில் சென்று கொண்டிருந்தாள். கடிதத்தை எடு என்று நாங்கள் கூறினோம். என்னிடத்தில் எந்தக் கடிதமும் இல்லை என்று அவர் கூறினார். நாங்கள் அவளது ஒட்டகத்தை அமர செய்து விட்டோம். மேலும் சோதனை செய்தோம். ஆனால், எங்களுக்கு எந்தக் கடிதமும் தென்படவில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தவறாக கூறவில்லை என்று நாங்கள் கூறினோம். நீ அந்தக் கடித்தை வெளியே எடுத்தே ஆக வேண்டும்; இல்லையென்றால், நாங்கள் உம்மை நிர்வாணமாக்கி விடுவோம். உமது ஆடையை பரிசோதிப்போம். கடுமை காட்டப்படுவதை அவள் கண்டபோது, இடுப்பின் பக்கம் குனிந்தாள். மேலும், தனது இடுப்பைச் சுற்றி ஒரு போர்வை அணிந்திருந்தாள். அதிலிருந்து அவள் அதனை வெளியே எடுத்து கொடுத்து விட்டாள். அதே புஹாரியின் மற்றோர் அறிவிப்பிற்கு ஏற்ப, அவள் தனது தலை முடியினுள் இருந்து அதனை வெளியே எடுத்து கொடுத்து விட்டாள். (இரண்டு அறிவிப்புகள் உள்ளன)

நாங்கள் அந்த பெண்ணை அழைத்துக் கொண்டு இறைத் தூதர் (ஸல்) அவர்களிடத்தில் வந்தோம். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர்- அதாவது கடிதம் எழுதியிருந்த ஸஹாபியாக இருந்த ஹாதிப், அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு நம்பிக்கை துரோகம் செய்திருக்கின்றார்; நான் அவரது கழுத்தை வெட்டுவதற்கு எனக்கு அனுமதி நல்குங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹாதிப் அவர்களிடம், எந்த விஷயம் உம்மை இவ்வாறு செய்ய வைத்தது?; இந்தக் கடிதத்தை ஏன் எழுதினீர்கள்? என்று கேட்டார்கள். ஹாதிப் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானோ அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மீது நம்பிக்கை கொள்ளாதவனாக இருப்பதற்கு எனக்கு என்ன ஆயிற்று? அதாவது, நானோ நம்பிக்கை கொண்டவர்களை சார்ந்தவனாக இருக்கின்றேன் ; மேலும் இது எந்தக்




கிளர்ச்சியும் செய்யவில்லை.

கூறினார்கள்: காரணம் என்னவாக இருந்தது என்றால், அவர்கள் அதாவது குறைஷிய மக்கள் என் மீது ஒரு உபகாரம் செய்திருந்தார்கள். அவர்கள் மூலமாக அல்லாஹ் எனது மனைவி, மக்களையும் மற்றும் சொத்துக்களையும் பாதுகாத்தான். அதாவது அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த எந்த நபரும் இப்படிப்பட்டவராக இல்லை. அதாவது அவர்கள் மூலமாக அல்லாஹ் அவர்களது குடும்பம், பிள்ளைகள் மற்றும் அவரது சொத்துக்களை பாதுகாக்கவில்லை.

இவர் உண்மையை கூறியுள்ளார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; மேலும், நீங்களும் இவரைக் குறித்து நன்மையான விஷயத்தை தவிர வேறு எதனையும் கூறாதீர்கள்.

அவர் சரியாகவே கூறியுள்ளார். அவர் உண்மையாளர் ஆவார்; அப்பாவித்தனத்தால் பேசிவிட்டார்.

அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், இவர் பத்ர் போரில் பங்கு பெற்றிருக்கவில்லையா என்ன? என்று கேட்டார்கள். அல்லாஹ் பத்ர் போர் ஸஹாபிகளை பார்த்துள்ளான் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். மேலும், நீங்கள் விரும்பியதை செய்து கொள்ளுங்கள் ; உங்களுக்கு சொர்க்கம் கடமையாகிவிட்டது என்று அல்லாஹ் கூறினான். அல்லது நான் உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறினான். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிவிட்டது. மேலும், அல்லாஹ் மற்றும் அவனது தூதர் நன்கறிவர் என்று கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் 3983,அறிவிப்பு எண்: 3007)

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் வரலாற்றின் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் எடுத்துரைத்துள்ளார்கள். இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு ஸஹாபி தமது உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற அந்த அனுதாபத்தின் வெளிப்பாட்டின் காரணமாக மக்காவின் மீது முஸ்லிம்களின் தாக்குதல் செய்தியை தமது உறவினர்களுக்கு அவர் இரகசியமாக எட்ட வைக்க விரும்பினார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இந்த விஷயம் கூறப்பட்டு விட்டது. இன்ன இடத்தில் ஒரு பெண் இருக்கின்றார்; அவரிடம் சென்று காகிதத்தைப் பெற்று வாருங்கள் என்று அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் வேறு சில ஸஹாபிகளை அனுப்பினார்கள். அவர்கள் அங்கு சென்றடைந்து அந்த பெண்ணிடம் காகிதத்தை கேட்டபோதோ அவள் மறுத்து விட்டாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அநேகமாக




ஏதோ தவறு ஏற்பட்டு விட்டது என்று சில ஸஹாபிகள் கூறினர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: இல்லை ; அன்னாருடைய கூற்று ஒருபோதும் தவறாக இருக்க முடியாது. அந்த காகிதம் கிடைக்காத வரை நான் இங்கிருந்து செல்ல மாட்டேன். அன்னார் (ரலி) அந்தப் பெண்ணை திட்டினார்கள். அப்போது அவள் அந்த காகிதத்தை வெளியே எடுத்து கொடுத்து விட்டாள். (குத்பாத்தே மஹ்மூத், தொகுதி 4, பக்கம் 182 -183)

மற்றோர் இடத்தில் அன்னார் (ரலி) இன்னும் கூடுதலாக இந்த சம்பவத்தை எடுத்துரைக்கின்றார்கள். கூறுகின்றார்கள்:

ஒரு பலவீனமான ஸஹாபி (ரலி) மக்காவாசிகளுக்கு இவ்வாறு கடிதம் எழுதிவிட்டார். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பத்தாயிரம் படை வீரர்களை கொண்ட படையை அழைத்துக் கொண்டு புறப்படுகின்றார்கள். அன்னார் (ஸல்) எங்கு புறப்படுகின்றார்கள்? என்று எனக்கு தெரியாது. ஆயினும், அநேகமாக அன்னார் (ஸல்) மக்காவின் பக்கம் செல்வதற்கு எண்ணம் கொண்டுள்ளார்கள் என்று நான் அனுமானிக்கின்றேன். மக்காவில் எனது சில அன்பர்களும், உறவினர்களும் இருக்கின்றனர். நீங்கள் இந்த கடினமான தருணத்தில் அவர்களுக்கு உதவி செய்வீர்கள்; மேலும், நீங்கள் அவர்களுக்கு எந்த துன்பமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்தக் கடிதம் அப்போது மக்காவிற்கு சென்றடைந்திருக்கவில்லை. அதற்குள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலை நேரத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், கூறினார்கள்: நீங்கள் இன்ன இடத்திற்கு செல்லுங்கள்; அங்கு ஒட்டகத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணை நீங்கள் காண்பீர்கள்; மக்காவாசிகளுக்கு அவள் கொண்டு செல்லும் ஒரு கடிதம் அவளிடம் இருக்கும்! என்று அல்லாஹ் எனக்கு கூறியுள்ளான். நீங்கள் அந்தக் கடிதத்தை அந்த பெண்ணிடமிருந்து வாங்கிக் கொண்டு வாருங்கள்! மேலும்,உடனடியாக, என்னிடம் வந்து விடுங்கள்!

அவர்கள் செல்ல முற்பட்டபோது, பாருங்கள்! அவள் பெண் ஆவாள்; அவள் மீது கடுமை காட்டாதீர்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். துவக்கத்தில் கடினம் காட்டாதீர்கள். கடிதம் உன்னிடம் உள்ளது என்று வலியுறுத்துங்கள் ; மேலும் அழுத்தம் கொடுங்கள். ஆனால், அதன் பிறகும் அவள் ஒப்புக் கொள்ளவில்லையென்றால், விண்ணப்பமும், கோரிக்கையும் பயனளிக்கவில்லை என்றால், பின்னர் அது எப்படிப்பட்ட விவகாரம் என்றால், பின்னர் நீங்கள் அவள் மீது கடுமையும் காட்ட முடியும். மேலும், அவளை கொலை செய்ய நேரிட்டால் கொலையும் செய்ய முடியும். ஆனால், கடிதம் கொண்டு செல்வதற்கு அனுமதித்து விடாதீர்கள். கடிதம் மிகவும் அவசியமாகும். அதை தடுத்து நிறுத்துங்கள்.

ஆக, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்தார்கள். அங்கு அந்த பெண் இருந்தார். அவள் அழத் தொடங்கினாள்; மேலும், நான் என்ன துரோகியா? ஏமாற்றுக்காரியா? என்று சத்தியங்கள் செய்யத் தொடங்கினாள். நீங்கள் என்னிடம் சோதனை நடத்துவீர்களா? என்று கேட்டாள். எனவே அவர்கள் அங்கும் இங்கும் தேடிப் பார்த்தனர். அவளது சட்டைப் பைகளில் தேடினர். பொருட்கள் இருந்தன ; ஆனால், கடிதம்

கிடைக்கவில்லை. கடிதம் இவளிடம் இருப்பதாக தெரியவில்லை என்று ஸஹாபிகள் கூறினர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு ஆக்ரோஷம் வந்து விட்டது.நீங்கள் அமைதியாக இருங்கள்! என்று அன்னார் (ரலி) அதாவது ஹஸ்ரத் (அலீ) அவர்கள் கூறினார்கள். மேலும், மிகவும் உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! இறைத் தூதர் ஒருபோதும் பொய் பேச முடியாது; ஆக, அன்னார் (ரலி) அந்த பெண்ணிடம், உன்னிடம் கடிதம் உள்ளது என்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இறைவன் மீது ஆணையாக! நான் பொய் கூறவில்லை,

பின்னர் அன்னார் (ரலி) வாளை வெளியில் எடுத்துவிட்டார்கள். மேலும் கூறினார்கள்: ஒன்று மரியாதையாக கடிதத்தை வெளியே எடுத்து விடு; இல்லையென்றால் நினைவில் கொள்; உன்னை நிர்வாணப்படுத்தி சோதனை செய்ய நேரிட்டாலும் நான் உன்னை நிர்வாணப்படுத்தி விடுவேன்.ஏனெனில், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறியது உண்மையாகும்; மேலும் நீ பொய் பேசிக் கொண்டிருக்கின்றாய்! எனவே அவள் பயந்து விட்டாள்; மேலும், நிர்வாணப்படுத்தப்படுவாய்! என்று அவளுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டபோது, அவள் உடனடியாக தனது தலைக் கொண்டையை அவிழ்த்து விட்டாள்; அந்த தலைக் கொண்டையில் அந்தக் கடிதம் வைக்கப்பட்டிருந்தது. அதனை அவள் வெளியே எடுத்து கொடுத்து விட்டாள். (ஸீரே ரூஹானீ, தொகுதி 7, அன்வாருல் உலூம், தொகுதி 24, பக்கம் 262 -263) தலை முடிகளில் அவள் அதனை மறைத்து வைத்திருந்தாள்.

எவ்வாறிருப்பினும், இதன் பிறகு அன்னார் (ஸல்) பயணத்தை தொடங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து புறப்பட்டது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஹஸ்ரத் அபூ ருஹ்ம் பின் ஹுஸைன் ஃகஃபாரீயை மதீனாவில் தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். இப்னு இஸ்ஹாக் அவர்களை பொருத்த வரை அன்னார் (ஸல்) முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் கூட்டத்தினருடன் புறப்பட்டார்கள். அப்போது ரமலானின் பத்து நாட்கள் கழிந்து விட்டிருந்தன. ஆனால், முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பலுடைய ஓர் அறிவிப்பிறகு ஏற்ப, அன்னார் (ஸல்) ரமலான் 2-ம் தேதி மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். புஹாரியின் விரிவுரையாளர் அல்லாமா இப்னு ஹஜ்ர் அவர்கள் ரமலான் 2-ம் தேதி அறிவிப்பிற்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், இந்த பயணத்தில் சில மக்கள் குதிரைகளிலும், வேறு சிலர் ஒட்டகங்களிலும் சவாரி செய்தார்கள்.

(ஃபத்ஹுல் பாரீ,தொகுதி 8, பக்கம் 4,கதீமீ குதுப் கானா ஆராம் பாஃக் கராச்சி)

மதீனாவிலிருந்து இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தலைமையில் படை புறப்பட்டபோது, அதில் உயிரை அர்ப்பணிக்கக் கூடிய சுமார் எழாயிரத்து நானூறு நபர்கள் இடம் பெற்றிருந்தனர். பனூ அஸத் மற்றும் ஸுலைம் போன்ற கோத்திரத்தாரும் பங்கு பெற்றதால் அந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால், மக்காவின் சாலையில் சென்று கொண்டிருக்கும்போது அந்த எண்ணிக்கை பத்தாயிரம் ஆகிவிட்டது. அன்னார் (ஸல்) ஸுல்ஸுல் என்ற இடத்தை அடைந்தார்கள். அது துல்ஹுல்பியாவிலிருந்து முன்னேறும் போது பைதாஃ என்ற இடத்திற்கு அருகில் ஒரு மலை இருந்தது. அப்போது, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களை இரண்டு சவாரிகளுடன் முன்னால் அனுப்பி வைத்தார்கள்.

சில நூல்களில் அந்த படையின் எண்ணிக்கை பனிரெண்டாயிரம் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், பெரும்பாலான அறிவிப்புகளில் பத்தாயிரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதுவே மிகவும் சரியானதாக தெரிகின்றது. (அஸ்ஸீரத்துல் ஹல்பியா,தொகுதி 3, பக்கம் 110, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) இதற்கிடையில், நாலாப்புறமும் முஸ்லிம் கோத்திரங்களின் பக்கம் தூதுவர்களை அனுப்பி வைத்தார்கள். மேலும்,முஸ்லிம் கோத்திரங்கள் தயாரகிவிட்டன ;மேலும் மக்காவின் பக்கம் புறப்பட்டவாறு வழிப்பாதையில் சந்தித்து விடுவார்கள் என்ற தகவல் கிடைத்து விட்டபோது, அன்னார் (ஸல்) மதீனத்து மக்களை ஆயுதம் ஏந்தும்படி கட்டளை வழங்கினார்கள். கி.பி 630, ஜனவரியின் முதல் தேதியில் அதாவது ரமலான் பத்தாம் தேதி, ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டில், இந்த படை மதீனாவிலிருந்து புறப்பட்டது ;மேலும், வழிப்பாதையில் நாலாப்புறமிருந்தும் முஸ்லிம் கோத்திரங்கள் படையில் இணைந்து கொண்டே சென்றன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ரமலான் பத்தாம் தேதி என்றே எழுதியுள்ளார்கள். சில இடங்களை கடந்து சென்ற பிறகு, ஃபாரான் காடுகளில் இந்தப் படை நுழைந்தபோது அதன் எண்ணிக்கை சுலைமான் நபியின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப பத்தாயிரத்தை தொட்டு விட்டது. (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் இல்ம்,தொகுதி 20, பக்கம் 337)

இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாரின் துணைவியார்களில் ஹஸ்ரத் உம்மே ஸல்மா (ரலி) அவர்கள் இருந்தார்கள். சில அறிவிப்புகளுக்கு ஏற்ப உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் மைமூனா (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். (மகாலாதே ஸீரத் டாக்டர் முஹம்மது யாஸீன், மஸ்ஹர் ஸித்தீகி, தொகுதி 3, பக்கம் 259)

புஹாரியின் ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் புதல்வி ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள் என்ற குறிப்பும் கிடைக்கின்றது. (புஹாரீ, கிதாபுஸ் ஸலாத், பாபுஸ் ஸலாத் ஃபீஸ் ஸவாபுல் வாஹிதா, ஹதீஸ் 357)

இந்த பயணம் ரமலான் மாதத்தில் நிகழ்ந்திருந்தது. பயணத்தின் துவக்கில் சில நாட்கள் அன்னார் (ஸல்) நோன்பு நோற்றிருந்தார்கள். ஆனால், பின்னர் அன்னார் (ஸல்) நோன்பு நோற்றிருக்கவில்லை. இன்னும் கூறப்போனால், மற்ற ஸஹாபிகளையும் நோன்பு நோற்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். புஹாரியில் வருகின்றது: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ரமலானில் வெற்றிப் போருக்கு புறப்பட்டார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னார் (ஸல்) மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையில் 42 மைல் தொலைவில் இருக்கின்ற மேலும் குதைத் மற்றும் உஸ்ஃவானுக்கு இடையில் உள்ள கதீத் நீரூற்றை அடைந்தபோது, அன்னார் (ஸல்) நோன்பு திறந்து விட்டார்கள். பின்னர் அன்னார் (ஸல்) நோன்பு நோற்கவில்லை. எந்த அளவிற்கு என்றால், அந்த மாதம் கழிந்து விட்டது. (புஹாரீ, கிதாபுல் மகாஸீ, பாப் அல்ஃபத்ஹ் கஸ்வா,ஹதீஸ் எண்: 4275)

புஹாரியில் இந்த அறிவிப்பு உள்ளது. புஹாரியிலேயே மற்றோர் அறிவிப்பு ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ரமலானில் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மேலும், அன்னாருடன் பத்தாயிரம் வீரர்களை கொண்ட படை இருந்தது. மேலும், மதீனாவிற்கு அன்னார் (ஸல்) வருகை புரிந்த எட்டரை ஆண்டின் துவக்கத்தில் இது நிகழ்ந்தது. மேலும், அன்னார் (ஸல்) மக்காவை நோக்கி புறப்பட்டார்கள். அன்னாரும், முஸ்லிம்களில் அன்னாருடன் இருந்தவர்களும், நோன்பு நோற்றிருந்தார்கள். அன்னாரும் நோன்பு நோற்றிருந்தார்கள் ; அவர்களும் நோன்பு நோற்றிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னார் (ஸல்) கதீத் என்ற இடத்தை அடைந்தார்கள்.அது ஒரு நீரூற்றாகும். மேலும் அது உஸ்ஃபான் மற்றும் குதைதிற்கு இடையில் அமைந்திருந்தது. அங்கு அன்னார் (ஸல்) நோன்பு திறந்தார்கள். மேலும், மக்களும் நோன்பு திறந்தார்கள். (புஹாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் : 4276)

இது தொடர்பாக புஹாரீ விரிவுரையாளர் அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) எந்த நாளில் மதீனாவிலிருந்து புறப்பட்டார்களோ, அந்த நாளில் அன்னார் (ஸல்) நோன்பு நோற்றிருந்தார்கள். இது சரியானது அல்ல என்பது எனது எண்ணமாகும். ஏனெனில், மதீனா மற்றும் குதைதிற்கு இடையில் பல நாட்கள் பயணத் தொலைவு இருந்தது.(ஃபத்ஹுல் பாரீ, தொகுதி 4, பக்கம் 227, கிதாபுஸ் ஸவ்ம்,

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➤ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➤ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➤ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➤ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 24-31 JULY 2025 Issue No.30& 31

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கதீமீ குதுப் கானா ஆராம் ஃபாக் கராச்சி)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுடன் இணைந்து எந்த இடத்தில் நோன்பு திறந்தார்கள்? இது தொடர்பாக அறிவிப்புகளில் பல இடங்களில் குறிப்பு கிடைக்கின்றது. குதைத் என்ற இடத்தில் நோன்பு திறந்தார்கள் என்று சில மக்கள் கூறுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் பயணத்தின்போது, எங்கு நோன்பு திறந்தார்கள்? என்பதன் கூடுதல் விவரம் உள்ளது. இது தொடர்பான அறிவிப்புகளில் முரண்கள் இருக்கின்றன.

அல்லாமா அய்னீ அவர்களை பொருத்த வரை சிலர் குதைத் என்ற இடத்திற்கு பதிலாக உஸ்ஃபான் என்று எழுதப்பட்டுள்ளது. சிலர் குராஉல் ஃகமீம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். சிலர் குதைத் என்று எழுதியுள்ளனர். காஸீ அய்யாஸ் இது குறித்து இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: அதாவது அறிவிப்புகளில், எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோன்பு திறந்தார்கள்? என்ற இந்த இடத்தை குறித்த முரண்பாடு இருக்கின்றது. எனினும் இந்த எல்லா அறிவிப்புகளில் ஒரே சம்பவமே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த எல்லா இடங்களும் ஒன்று மற்றொன்றுக்கு அருகில் இருக்கின்றன. மேலும், இந்த அனைத்து இடங்களும் உஸ்ஃபானுடைய பகுதியில் இருக்கின்றன. (உம்தத்துல் காரீ,தொகுதி 11, பக்கம் 68, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரஜிலிருந்து புறப்பட்டார்கள். அப்போது, வழியில் அன்னார் (ஸல்) ஒரு பெண் நாயை கண்டார்கள்.அதன் குட்டிகள் அதனிடம் பால் குடித்து கொண்டிருந்தன.

விலங்குகளுடன் அனுதாபத்தின் சம்பவமும் இதில் வந்து விடுகின்றது.

நீங்கள் அதற்கு முன்னால் நின்று கொள்ளுங்கள்! என்று அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஜுஅய்ல் பின் ஸூராகஃ (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்.அதாவது அந்த பெண் நாய் எங்கு அமர்ந்திருந்ததோ அங்கு நின்று கொள்ளுங்கள்! என்று கட்டளையிட்டார்கள். ஏனெனில், படையைச் சேர்ந்த எவரும் அதற்கோ அல்லது அதன் குட்டிகளுக்கோ எந்த தொந்தரவும் கொடுத்து விடக் கூடாது. அவற்றிற்கு எந்த தொல்லையும் கொடுத்து விடக் கூடாது என்பதற்காக அன்னார் (ஸல்) அவ்வாறு செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உளவாளிகளை பிடிப்பதற்காக குதிரை வீரர்களின் படை ஒன்றை முஸ்லிம்களுக்கு முன்னால் புறப்படும் படி செய்திருந்தார்கள். மேலும் பனூ குஸாஆவும் வழிப் பாதையில் எந்தவொரு வழிப் போக்கரையும் செல்ல அனுமதிக்கவில்லை. மற்றொரு கோத்திரமும் தடுக்கப்பட்டிருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட குழுவினர் ஹவாஸின் கோத்திரத்தின் ஓர் உளவாளியை கைது செய்து கொண்டு வந்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவனிடம் விசாரித்தபோது, ஹவாஸின் உங்களுக்கு எதிராக தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் நமக்கு போதுமானவன் ஆவான்; அவன் சிறந்த உதவியாளன் ஆவான்.

இந்த உளவாளியை தடுத்து நிறுத்தி வையுங்கள் ;ஏனெனில் அவன் சென்று மக்களுக்கு தகவல் கூறிவிடக் கூடாது என்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் கட்டளையிட்டார்கள். அன்னார் (ஸல்) குதைத் என்ற இடத்தை அடைந்தபோது, அங்கு பனூ ஸுலைம் கோத்திரத்தார் ஓராயிரம் எண்ணிக்கையில் இருந்தனர். அவர்கள் அன்னாருடன் இணைந்து கொண்டனர். இங்கு அன்னார் (ஸல்) கொடிகளை கட்டினார்கள்.மேலும் அவற்றை கோத்திரங்களிடம் வழங்கினார்கள். குதைத் மைதானத்தில் நபவயின் படையின் ஆயத்தம் என்பது கோத்திரங்களின் அடிப்படையில் நிகழ்ந்தது. ஒவ்வொரு கோத்திரத்தின் படைக்கும் அதே கோத்திரத்தை சேர்ந்த நபர் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸாரி ஸஹாபிகளை குடும்பங்களின் அடிப்படையில் பன்னிரெண்டு குழுக்களில் வகைப்படுத்தியிருந்தார்கள். அவ்ஸ் கோத்திரத்தின் ஆறு படையும், கஸ்ரஜ் கோத்திரத்தின் ஆறு படையும் இருந்தது. முஹாஜிர்களின் மூன்று கொடிகள் ஹஸ்ரத் அலீ பின் தாலிப் (ரலி),ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி), ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வகாஸ் (ரலி) ஆகியோரிடம் இருந்தன. (ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5. பக்கம் 212, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இந்த போர் திட்டத்தின்போது, ஒரு சம்பவத்தைப் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. அது அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் (இந்த அபூ ஸுஃப்யான் வேறு ஒருவர் ஆவார்) மற்றும் அப்துல்லாஹ் பின் அபீ உமைய்யா ஆகியோரின் இஸ்லாத்தை தழுவுதல் பற்றிய குறிப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் வழி சகோதரரும், பால்குடி சகோதரருமான அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் - இவர் சிறிய தந்தையார் வழி சகோதரராகவும் இருந்தார். மேலும், பால் குடி சகோதரராகவும் இருந்தார். தமது மகன் ஜஃபர் மற்றும் அப்துல்லாஹ் பின் அபீ உமைய்யா பின் முகைராவுடன் மக்காவிலிருந்து புறப்பட்டார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையில் ஸனிய்யதுல் இகாப் என்ற பெயர் கொண்ட இடத்தில் அவர்கள் சந்தித்தார்கள். இவர்கள் இருவரும் நபி (ஸல்) அவர்களின் கடும் எதிரிகளாக இருந்தனர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் நேரடியாக ஆஜராகுவதற்கு தைரியம் வரவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ உமைய்யா (ரலி) அவர்களின் சகோதரியாக இருந்த உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் உம்மே ஸல்மா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், தங்களின் சிறிய தந்தை வழி சகோதரர் அதாவது அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் மற்றும் மாமி மகன் அதாவது அப்துல்லாஹ் தங்களை சந்திப்பதற்கு விருப்பம் கொண்டுள்ளனர் என்று கூறினார்கள். எனக்கு அவர்களின் எந்த அவசியமும் இல்லை; நான் சந்திக்க விரும்பவில்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும், அன்னார் (ஸல்) கூறினார்கள்:

எனது சிறிய தந்தை வழி சகோதரனோ என்னை அவமதித்துள்ளார். இவர்கள் கவிஞராக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக கவிதை வரிகளை எழுதி வந்தார்கள். மேலும், அப்துல்லாஹ்வோ என்னை மக்காவில் என்னென்னவெல்லாம் கூறியிருந்தார். பகைமையின் உச்சத்தை தொட்டிருந்தார். நான் எப்படி அவர்களை சந்திப்பேன்?

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இந்த கூற்று, அபூ ஸுஃப்யான் பின் ஹாரிஸ் அவர்களை சென்றடைந்தபோது, அவர் உணர்ச்சிவயப்பட்டவாறு கூறினார்: முஹம்மது (ஸல்) அவர்கள் என் மீது திருப்தி கொள்ளவில்லையென்றால், மேலும் சந்திப்பதற்கு அனுமதி வழங்கவில்லை என்றால், பின்னர் நான் எனது இந்த மகனை யாரை அழைத்துக் கொண்டு வந்திருந்தாரோ அவரை அழைத்துக் கொண்டு பாலைவனத்தின் பக்கம் புறப்பட்டு விடுவேன். எந்த அளவுக்கு என்றால், பசி மற்றும் தாகத்தால் நான் மடிந்து விடுவேன். ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு இந்தசெய்தி கிடைத்தபோது,

இதன் தொடர்ச்சி. 8-ம் பக்கம் ......

**National Watch Company**
Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230




All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad